இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 53 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 14 – ஞாயிற்றுக்கிழமை 01 அக்டோபர் 2023 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 53 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 14 - Sunday 01 October 2023 - Madurai 8 Pages ₹ 5.00

## நாடாளுமன்றத் தேர்தல்: தொகுதிப் பார்வையாளர்கள் -

# மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெறுகிறது!

**சென்னை, அக். 01 -**

**நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக இன்று (01.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது.**

நாடாளுமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதில் தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகள், புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதி என 40 இடங்களிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்று கழகத் தலைவரும், முதலமைச்சருமான



மு.க.ஸ்டாலின் அவர்கள் கட்சியினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கான பணிகளை தி.மு.க. தொடங்கி செய்து வருகிறது. அந்த வகையில், மண்டல வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டங்கள் தி.மு.க. சார்பில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு கட்சியினருக்கு அறிவுரை வழங்கி வருகிறார். வரும் நாடாளுமன்றத் தேர்தல் எவ்வளவு முக்கியம், வாக்குச்சாவடி முகவர்கள் எப்படி செயல்பட வேண்டும், சமூக வலைதள பயன்பாட்டின் முக்கியத்துவம் குறித்து முதல்வர் ஸ்டாலின் அவர்கள் எடுத்துரைத்து வருகிறார்.

இதேபோல் தி.மு.க.வின் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.

இந்நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் பணிகளை விரைவு படுத்தும் வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக, இன்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பு வருமாறு: -

**தமிழ்நாடு முதல்வர், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதிப் பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டம் இன்று (அக்.1ம் தேதி) காலை 10.30 மணியளவில் காணொலி காட்சி வாயிலாக நடைபெறும். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## மணிப்பூரில் கலவரம்:

# பா.ஜ.க. முதல்வருக்கு எதிர்ப்பு வலுக்கிறது!

### 500 பேர் கொண்ட கும்பல் வீட்டுக்குள் நுழைய முயற்சி!

*இம்பால், அக். 01 -*

*மணிப்பூர் முதல்வர் என்.பிரேன் சிங் வசிக்கும் வீட்டை 500 முதல் 600 பேர் கொண்ட கும்பல் முற்றுகையிட்டு வீட்டுக்குள் நுழைய முயற்சி செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.*

*இதையடுத்து அப்பகுதியில் போலீஸார் குவிக்கப்பட்டு போராட்டக்காரர்கள் விரட்டப்பட்டனர்.*

*மணிப்பூரில் மாதக் கணக்கில் மைத்தேயி, குகி இனத்தவர் இடையே மோதல் நீடித்து வருகிறது. இந்த கலவர சம்பவங்களால் இதுவரை அங்கு 180க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர். மேலும் ஏராளமான பேர் வீடுகளை விட்டு வெளியே அரசு அமைத்துள்ள நிவாரண முகாம்களில் தங்கியுள்ளனர்.*

*இந்த கலவரத்தை கட்டுப்படுத்த தவறியதற்காக முதல்வர் பிரேன் சிங்குக்கு தொடர்ந்து எதிர்ப்பு வலுத்து வருகிறது. இந்நிலையில் இம்பாலில் உள்ள அவரது பூர்வீக வீட்டை நோக்கி சுமார் 500 முதல் 600 பேர் கொண்ட கும்பல் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் திரண்டு வந்தது. வீட்டுக்கு அருகே வந்த அவர்கள் வீட்டை முற்றுகையிட முயற்சி செய்தனர்.*

*அவர்களை, சுமார் 100 மீட்டர் தூரத்திலேயே அங்கு பாதுகாப்புக்கு இருந்த போலீஸார் தடுத்து நிறுத்தினர். ஆனால் போலீஸாரையும் மீறிமுதல்வரின் வீட்டுக்குள் நுழைந்து தாக்குவதற்கு அவர்கள் முயன்றனர். இதையடுத்து போலீஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தி திரும்பிச் செல்லுமாறு விரட்டினர். இதையடுத்து அவர்கள் கலைந்து சென்றனர். இதன் மூலம் முதல்வரின் பூர்வீக வீட்டை தாக்கும் முயற்சி முறியடிக்கப்பட்டது.*

*இம்பாலில் உள்ள அரசு வீட்டில் பிரேன் சிங் தங்கியிருப்பதால், அவரது பூர்வீக வீட்டில் தற்போது யாரும் வசிக்கவில்லை. இருப்பினும் மாநிலத்தில் கலவரம் நீடிப்பதால் அந்த வீட்டுக்கும் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.*

---

## மாநிலங்களுக்கு நிதியை நிறுத்தி

# 100 நாள் வேலை திட்டத்தை கருணைக் கொலை செய்கிறது!

### ஒன்றிய அரசுக்கு காங்கிரஸ் கண்டனம்!

புதுடெல்லி, அக். 01 –

மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டிய நிதியை நிறுத்தி, 100 நாள் வேலை திட்டத்தை ஒன்றிய அரசு திட்டமிட்டு கருணைக் கொலை செய்வதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டி உள்ளது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது சமூக வலை தள பக்கத்தில் ஒரு பதிவு வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: –

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் எனப்படும் 100 நாள் வேலை திட்டத்தில், கிராம சபைகள் மூலம் சமூக தணிக்கை செய்வது அவசியம் ஆகும். ஊழலை களைவதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாநிலமும் சுயேச்சையான சமூக தணிக்கை குழு வைத்துள்ளது. அதற்கான நிதியை ஒன்றிய அரசே வழங்கி வருகிறது.

ஆனால், சமீபகாலமாக இந்த நிதியை வழங்குவதில் ஒன்றிய அரசு தேவையற்ற கால தாமதம் செய்கிறது.

இதனால், சமூக தணிக்கைகள் உரிய நேரத்தில் நடப்பது இல்லை. சமூக தணிக்கைகள் சமரசம் செய்து கொள்ளப்படுகின்றன. இதை சாக்காக வைத்து, மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்க மறுக்கிறது.

இதனால், சமூக தணிக்கை பணி மட்டுமின்றி, தொழிலாளர்களுக்கு சம்பள பட்டுவாடா செய்வதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், 100 நாள் வேலை திட்டத்தை சக்கர வியூகத்தில் சிக்க வைத்து, அதை திட்டமிட்டு கருணைக் கொலை செய்யும் பணியில் ஒன்றிய அரசு ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

---

# தமிழ்நாட்டில் இன்று 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

### சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

*சென்னை, அக். 01 -*

*தமிழ்நாட்டில் இன்று 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தமிழக கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதால், கோவை, நெல்லை, நீலகிரி, தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, தென்காசி, திருவள்ளூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும்.*

*தமிழ்நாடு, புதுச்சேரி, காரைக்காலில் இன்று முதல் 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும். அதிகபட் வெப்பநிலை 1536 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 26 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.*

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:**

*தமிழக கடலோரப்பகுதிகளில் இன்று மற்றும் நாளை தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் குறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக் கூடும். வங்கக்கடல் பகுதிகளில் இன்று இலங்கை கடலோரப்பகுதிகள் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு மத்திய வங்கக்கடல் பகுதிகள், வடக்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 55 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.*


*இவ்வாறு சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

---

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (5)

### அக்டோபர் 4 புதன்கிழமை வெளிவருகிறது !



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று " முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று அறிவிக்கப்பட்டு, இதுவரை 4 சிறப்பிதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.**

**அக்டோபர் 2 - திங்கள் கிழமை, அண்ணல் காந்தி அடிகள் பிறந்த நாள் என்பதால், அன்று முரசொலிக்கு விடுமுறை.**

**எனவே அக்டோபர் 4, புதன்கிழமை அன்று, முரசொலி சிறப்பிதழ்(5), "தமிழ்த் திரை உலகத்தின் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

# திருச்சி துறையூரில் ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்!

திருச்சி, அக்.01-

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், ஜமீன்தார் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் துறையூர் நகராட்சிக்கான குடிநீர்த்திட்டம் அம்ருத்2,0 நிதி திட்டத்தின் கீழ் ரூபாய் 108.90 கோடி மதிப்பீட்டில் அமையவுள்ள கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அடிக்கல் நாட்டி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் பேசிய அமைச்சர். அப்பொழுது கொள்ளிடம் ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு கிளியனூர் அருகில் ஐந்து நீர் உறிஞ்சும் கிணறுகள் மூலமாக துறையூர் நகருக்கு தனி காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 16,690 மீட்டர் தொலைவிற்கு குழாய் அமைத்து குடிநீர் கொண்டு வரப்பட உள்ளது. இத்திட்டமானது துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளுக்கு மட்டும் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்ட பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவடையும் எனவும் அதன் பிறகு துறையூர் பகுதிக்கு காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் தினமும் பொதுமக்களுக்கு குடிநீர் சீராக வழங்கப்படும் என தெரிவித்தார். மேலும் துறையூர் பகுதிக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்கவும், சின்ன ஏரியை தூர்வாரி வடிகால் நீரை மறுசுழற்சி செய்து நடைமுறைக்கு கொண்டு வரவும் புதிய புற வழிச்சாலை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார், முறிசி சட்டமன்ற உறுப்பினர் காடு வெட்டி தியாகராஜன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின்குமார், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### பாசனத்திற்கான மோட்டார் பம்பு செட்டுக்கு

# அரசின் ரூ.15 ஆயிரம் மானியத் திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பயன் பெறுவீர்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



சென்னை, அக்.01-

வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தமிழ்நாடு அரசு அறிமுகப் படுத்தியுள்ள பாசனத்திற்கான மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.15,000/ மானியமாக வழங்கும் திட்டத்தில் விவசாயிகள் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

**திட்டத்தின் நோக்கம்**

விவசாயத்திற்கு பழைய, திறன்குறைந்த மின் மோட்டார் பம்புசெட்டுகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதால், மின்சாரப் பயன்பாடு அதிகமாவதோடு, பாசன நேரமும் அதிகரிக்கிறது. சாகுபடிக்கான செலவு அதிகரித்துவரும் வேளையில், சிறு, குறு விவசாயிகள் இத்தகைய பழைய திறன் குறைந்த பம்பு செட்டுகளை மாற்றுவதற்குத் தயங்குகிறார்கள். இத்தகைய விவசாயிகளின் நலனுக்காக, மின்சார பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல் மற்றும் அதிகமான பாசன நீரினை குறைந்த செலவில் இறைத்தல் ஆகிய நோக்கத்திற்காக, புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகளை விவசாயிகள் வாங்குவதற்கான மானியம் தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பொறியியல் துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

**திட்ட விபரம்**

பழைய பம்புசெட்டை மாற்றி, புதிய மின் மோட்டார் பம்புசெட் நிறுவுவதற்கும், புதிதாக அமைக்கப் பட்டுள்ள கிணற்றுக்கு புதிய மின் மோட்டார் பம்புசெட் வாங்குவதற்கும் 5 ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகளுக்கு இத்திட்டத்தில் மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**மானியம் எவ்வளவு?**

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் மானியம் பெறுவதற்கு விவசாயிகள் தங்களின் விபரம் தெரிவித்து புதிய மின் மோட்டார் பம்புசெட் வாங்கும் பொழுது அதன் மொத்த தொகையில் 50% அல்லது ரூ.15,000/ இவற்றில் எது குறைவோ அத்தொகை பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

**மானியம் பெறுவதற்கான தகுதி**

ஐந்து ஏக்கர் வரை நிலம் வைத்திருக்கும் சிறு, குறு விவசாயிகள், தங்களது திறன்குறைந்த பழைய மின்மோட்டார் பம்புசெட்டுகளை மாற்ற விரும்பினாலும், புதிதாக கிணறு அமைத்து, சொந்தமாக மின் இணைப்பு பெற்ற விவசாயிகளும், இத்திட்டத்தில் பயன் பெறலாம். இத்திட்டத்தில் 5,000 சிறு குறு விவசாயிகளுக்கு மானியம் வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்காக 1000 எண்கள் பம்பு செட்டுகள் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் அங்கீகாரம் பெற்ற நிறுவன மாடல்களிலிருந்து, தங்களுக்கு விருப்பமான நான்கு ஸ்டார் தரத்திற்குக் குறையாமல் உள்ள மின்மோட்டாரை விவசாயிகள் தேர்வு செய்து கொள்ளலாம். மேலும், ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவியுள்ள விவசாயிகள் மற்றும் நுண்ணீர்ப் பாசன அமைப்பு நிறுவிட விருப்பமுள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெற தகுதியுடையவர் ஆவார்.

**எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?**

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் உழவன் செயலி மூலமாகவோ, அல்லது நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு (MIMIS) என்ற இணையதளம்மூலமாகவோ விண்ணப்பித்து, தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். கூடுதல் விபரங்களுக்கு வருவாய் கோட்ட அளவிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களை நேரில் தொடர்பு கொள்ளலாம்.

**மானியம் பெறுவதற்கு தேவைப்படும் ஆவணங்கள்:**

இதுவரை நுண்ணீர்ப் பாசன அமைப்பினை நிறுவிடாத விவசாயிகள் ஆதார் அட்டை, சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ், புகைப்படம், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம், ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவராயிருப்பின் சாதிச் சான்றிதழ், சிட்டா, கிணறு விபரத்துடன் கூடிய அடங்கல், மின் இணைப்பு (Service Connection) சான்றிதழ், புதிய மின்மோட்டார் வாங்குவதற்கான உத்தேச விலைப் பட்டியல்/ விலைப்புள்ளி போன்ற ஆவணங்களுடன் உழவன் செயலி மூலமாகவோ அல்லது நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பு (MIMIS) இணையதளம்மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

ஏற்கனவே தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை மூலம் மானியத்தில் நுண்ணீர்ப் பாசனம் நிறுவியுள்ள விவசாயிகள் மின் இணைப்பு சான்றிதழ் மற்றும் புதிய மின்மோட்டார் வாங்குவதற்கான உத்தேச விலைப்பட்டியல்/ விலைப்புள்ளியுடன் வருவாய் கோட்ட அளவிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, நுண்ணீர்ப் பாசன மேலாண்மை தகவல் அமைப்பில் (MIMIS) பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்கலாம்.

அதிக நீர் இறைக்கும் திறன் கொண்ட 4 ஸ்டார் தரத்திற்கு குறைவில்லாத 19 மின்மோட்டார் தயாரிப்பு நிறுவனங்களின் 196 மாடல் மின் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் மாடல்களின் விபரங்களை https://aed.tn.gov.in/media/filer_public/ae/6d/ae6d6917a61b4594a7c840a03354541b/chabbimetadata.pdf அல்லது https://tnhorticulture.tn.gov.in:8080/dXrUJSnG2k/Electric%20motor%20pumpsetpamphlet.pdf என்ற இணைய தள முகவரியினைச் சொடுக்கி அறியலாம். இவற்றிலிருந்து விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான நிறுவனங்களின் மாடல்களை தேர்வு செய்து கொள்ளலாம். மேலும் பம்ப்செட் மெக்கானிக்குகள், தங்களிடம் பழுதுநீக்க வரும் விவசாயிகளை புதிதாக பம்ப்செட் வாங்குவதற்கு விருப்பமுள்ளவர்களாக இருந்தால், அவர்களை வருவாய் கோட்ட அளவில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பாசன வசதியை மேம்படுத்திடவும், சிறு, குறு விவசாயிகளின் நிதிச்சுமையினை வெகுவாகக் குறைக்கும் நோக்கத்திலும், தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள மின்மோட்டார் பம்பு செட்டுக்கு ரூ.15,000/ மானியமாக வழங்கும் இத்திட்டத்தில் இணைந்து பயன்பெறுமாறு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** ஏண்ணே; ஒன்றியத்தில் நிலையான ஆட்சியினால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி–என்று தமிழ்நாடு ஆளுநர் ரவி, சிவகாசியில் பேசியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; **ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதா என்பது விவாதத்திற்குரிய தலைப்பு.**

**ஆனால், ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் ஊழல்-முறைகேடுகள் வளர்ந்திருக்கின்றன என்பதற்கு இந்தியத் தலைமைக் கணக்காயரின் அறிக்கையே சான்றாவணம்!**

**சிறுபான்மையினர்க்கு எதிரான வெறுப்பும், துவேஷமும், பா.ஜ.க.வினரால், இதுவரை சரித்திரம் காணாத அளவுக்கு அதிகமாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஏராளமான சம்பவங்களே சாட்சி !**

**இப்படி எதையெதை வளர்த்திருக்கிறார்கள் - கொடுத்த வாக்கை எந்தவிதம் காப்பாற்றி இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டே போகலாம்.**

**ஆளுநர் பேச்சை யாரும் பொருட்படுத்துவதில்லை. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக பரப்புரை மேற்கொள்ள ஆளுநர், 'திராவிட மாடல்' ஆட்சியின் செலவில் பயிற்சி - ஒத்திகை மேற்கொண்டுள்ளார் !**

### தாம்பரம் - மங்களூரு இடையே

# பண்டிகை கால சிறப்பு ரயில்!

சென்னை, அக்.01-

பண்டிகை காலம் நெருங்கி வருவதால், ரயில்களில் பயணிகளின் கூட்ட நெரிசல் அதிகரித்துள்ளது. இதனால், பண்டிகை கால சிறப்பு கட்டண சிறப்பு ரயில்களை இயக்கும் பணியில் ரயில்வே நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இந்தவகையில், சேலம், ஈரோடு, கோவை வழியே பண்டிகை கால சிறப்பு ரயிலாக தாம்பரம் - மங்களூரு இடையே வாராந்திர சிறப்பு ரயிலை இயக்குவதாக தெற்கு ரயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதன்படி, தாம்பரம் - மங்களூரு வாராந்திர சிறப்பு கட்டண சிறப்பு ரயில் (06049) அக்டோபர் 6, 13, 20, 27ம் தேதிகளில் (வெள்ளி தோறும்) இயக்கப் படுகிறது.

தாம்பரத்தில் மதியம் 1.30 மணிக்கு புறப்படும் இந்த ரயில், எழும்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை வழியே சேலத்திற்கு இரவு 7.20 மணிக்கு வந்து சேர்கிறது. பின்னர், 5 நிமிடத்தில் புறப்பட்டு ஈரோட்டிற்கு இரவு 8.25க்கும், திருப்பூருக்கு இரவு 9.13க்கும், கோவைக்கு இரவு 10.12க்கும் சென்று, பாலக்காடு, கோழிக்கோடு, பையனூர், காசர்கோடு வழியே மங்களூருக்கு அடுத்தநாள் காலை 7.30 மணிக்கு சென்றடைகிறது. மறுமார்க்கத்தில், மங்களூருதாம்பரம் வாராந்திர சிறப்பு கட்டண சிறப்பு ரயில் (06050) நேற்று (30ம் தேதி), அக்டோபர் 7, 14, 21, 28ம் தேதிகளில் (சனிக்கிழமை தோறும்) இயக்கப்படுகிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் வீட்டு வசதி வாரியம் சார்பில் மறுமேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட இருக்கும் நந்தனம் வீட்டு வசதி வாரிய தாமரை குடியிருப்புகளையும் வாடகைக் குடியிருப்புகளையும் நந்தனத்தில் உள்ள பழைய வீட்டு வசதி வாரிய தலைமை அலுவலக கட்டடத்தையும் நேற்று முன்தினம் (29.09.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து ஆலோசனை வழங்கினர். வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் சரவணவேல்ராஜ், தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, தலைமை பொறியாளர் (நகரம்) கண்ணன், மேற்பார்வை பொறியாளர் லக்ஷ்மி நாராயணன், செயற்பொறியாளர் குமரேசன் உள்ளிட்ட துறை அதிகாரிகள் மற்றும் தி.மு.க. இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழகம் முழுவதும்

# விவசாய அணி சார்பில் கண்காட்சி - விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்!

## ஏ.கே.எஸ்.விஜயன் தலைமை! நெல்லை மண்டல விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

தென்காசி, அக்.1-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தி.மு.க விவசாய அணி சார்பில் நெல்லை மண்டலத்திற்கு உட்பட்ட தி.மு.க விவசாய அணி மாவட்டம் மற்றும் மாநகரத் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் கலந்தாலோசனை கூட்டம் 29.09.2023 தென்காசி தெற்கு மாவட்டம் குற்றாலம் ஐந்தருவி சாலை சேனைத் தலைவர் திருமண மண்டபத்தில் கழக தி.மு.க விவசாய அணி செயலாளர், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ. மாநில விவசாய அணி துணை செயலாளர் முத்துராமலிங்கம், இணை செயலாளர்கள்ளிப்பட்டி மணி, குறிச்சி சிவக்குமார், டேம் வெங்கடேசன் புதுக்கோட்டை மணி, துணை அமைப்பாளர் செல்லப்பா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்லதுரை மாநில துணை அமைப்பாளர் ஆதி கேசவன், சூடப்பட்டி சுப்பிரமணி, தென்காசி தெற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன், வடக்கு மாவட்ட விவசாயி அணி அமைப்பாளர் மாடசாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல் காதர் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் முத்துராமலிங்கம், செல்வம், காதர் அண்ணாவி, அருணாசலம், முருகன், ராஜேந்திரன், சண்முகராஜா, வெள்ளத்துரை பாண்டியன், கனியப்பா என்ற முகமது பாலசுப்பிரமணியன், வெள்ளைச்சாமி, முத்துப் பாண்டியன் திருமலை குமார், சரவணபெருமாள், ஸ்ரீ குமார், வீரமணி, அன்புக்கரசு, கருப்பசாமி, சங்கரபாண்டியன், பொன்னையா பாண்டியன், முருகன், கோபி, பழனிச்சாமி காந்தி, முத்துமாரி, ஐயப்பன், குட்டித்துரை, குண்டு பாண்டியன், மகாராஜன், முத்து, கனகராஜ் உள்பட தூத்துக்குடி தெற்கு, வடக்கு, மாநகரம், நெல்லை கிழக்கு, மத்திய, மாநகர, கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு, விருதுநகர் வடக்கு, தெற்கு, மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு மரக்கன்று, மண்வெட்டி உட்பட விவசாய உபகரணங்களை கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடியே 6 லட்சத்து 50,000 மகளிர் குடும்பங்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூபாய் 1000, வழங்கி உலகத்திலேயே முதன்மையான மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்திருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

கலைஞர் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் தி.மு.க. விவசாய அணியும் இணைத்து விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட உத்தரவிட்ட கழகத் தலைவருக்கு நன்றி தெரிவிப்பது, முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்கள் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவினை பட்டி தொட்டி முதல் பட்டினக்கரை வரையென அனைத்து இடங்களிலும் எழுச்சியுடனும் கொண்டாட வேண்டும் என்றும் இந் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தில் தி.மு.க. விவசாய அணியையும் இணைத்து விவசாய கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தமிழகம் முழுவதும் நடத்திட வேண்டுமென உத்தரவிட்ட கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை வேளாண் விஞ்ஞானி எம். எஸ்.சுவாமிநாதன் 28.09.2023 அன்று காலமானார் (வயது 98) கும்பகோணத்தில் பிறந்த இவர் குடந்தையில் பள்ளி படிப்பையும் திருவாங்கூர் பல்கலைக்கழகத்தில் இளநிலை அறிவியல் பட்டத்தையும் கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் இளநிலை வேளாண்மை பட்டத்தையும் பெற்றவர். பல்வேறு ஆய்வு நிறுவனங்களில் பணியாற்றிய பிறகு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். இவர் இந்தியாவின் பசுமைப் புரட்சியை முன்னின்று நடத்தியவர். பசிப்பிணி ஒழிப்பு உணவு பாதுகாப்பு என்ற இரு குறிக்கோள்களுக்காக கடந்த முக்கால் நூற்றாண்டு காலம் அரும்பணி ஆற்றி வந்த தலைசிறந்த வேளாண் அறிவியலாளர் எம்.எஸ்.சுவாமிநாதன் மறைந்தார். என்ற செய்தி மிகவும் வருத்தம் அளிக்கிறது. அவரது இழப்பு அறிவுத்துறைக்கும், தமிழ்நாட்டுக்கும் ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும். மிகப் பெரும் ஆளுமையை இழந்து தவிக்கும் அறிவியல் உலகினருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது. கழகத் தலைவர் முதலமைச்சர்கள் மறைந்த எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்களின் இறுதி ஊர்வலத்தினை அரசு மரியாதையுடன் நடத்தப்படும் என்று தெரிவித்தமைக்கு இக்கூட்டம் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

விவசாயக் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சிறப்பாக கொண்டாடிடுவோம்.

விவசாயி அணி சார்பாக அனைத்து கழக ஒன்றியத்திலும் நவீன தொழில்நுட்பங்கள் விவசாய திட்டங்கள் மற்றும் கூட்டுறவு வங்கியின் பயிர் கடன்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் வேளாண்மை அதிகாரிகளை கொண்டு வருகின்ற மாதங்களில் நடத்த வேண்டும்.

விழிப்புணர்வு முகாம் குறித்த விளம்பரங்கள் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே ஒலிபெருக்கி அறிவிப்பு செய்தித்தாள் விளம்பரங்கள் மற்றும் சுவரொட்டிகள் மூலமாக செய்ய வேண்டும். முகாமில் பங்கு விவசாயிகள் பயன்பெறும் வகையில் மரக்கன்றுகள் மற்றும் விதைப்பந்து பைகளுடன் தலைவர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு செய்த பல தொலைநோக்கு திட்டங்கள் குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கிட வேண்டும்.

மாவட்டத்திற்கு ஒரு இடத்தில் என பல்வேறு விவசாயம் முறைகள் அதன் மகசூல் குறித்து மற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் விவசாயத்திற்கான முன்னோடி திட்டங்கள் பற்றிய விளக்கங்களின் தொகுப்புகள் அடங்கிய விவசாய கண்காட்சி நிகழ்ச்சி வருகின்ற மாதங்களில் நடத்த வேண்டும்.

கண்காட்சி நடைபெறும் இடம் மற்றும் நடைபெறும் நாட்கள் குறித்த பட்டியலை இறுதி செய்து தலைமைக் கழகத்திற்கு அணி அனுப்ப வேண்டியுள்ளதால் விரைவாக கண்காட்சியின் செயலாளரிடம் தெரிவிக்க வேண்டும். அனைத்து உழவர் சந்தைகளிலும் தேவைப்படும் கூடுதல் வசதிகளை விவசாய அணியின் சார்பாக செய்து வரும் வகையில் முக்கிய கழக நிர்வாகிகளுக்கு கொண்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்த வேண்டும். விவசாயிகளுக்கான நான் விவசாயி என்ற செயலியை உருவாக்கி அதில் விவசாய திட்டங்கள் கால நிலை குறித்து அறிவிப்புகள் மற்றும் சந்தைகளின் விலை விவரங்கள் குறித்து அறிவிப்புகள் ஆகியவை இடம்பெறும் வகையில் அமைக்கப்பட வேண்டும். இந்த செயலியானது முதலமைச்சர் மற்றும் வேளாண் நலத்துறை அமைச்சர் ஆகியோர் மூலம் துவக்கி வைக்கப்பட வேண்டும்.

நெல்லையில் நடைபெறும் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழா விவசாய கண்காட்சியில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் "திராவிட மாடல்" நாயகர் ஆட்சியில் விளக்கமாக விவசாயிகளுக்கு செய்திட்ட நலத்திட்டங்கள் கண்காட்சி மூலம் நடைபெற உள்ளது. இப்பகுதி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் கண்டு களித்து, விவசாயிகள் பயன்படும் வகையில் உதவிட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

முன்னதாக குற்றாலத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச்சிலைக்கு கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம், மஞ்சநாயக்கன்பட்டியில் கட்டிடம் கட்டும் பணிக்கு நேற்று (30.09.2023) அடிக்கல் நாட்டி வைத்து பேசினார். அருகில் திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.வேலுச்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் கா.பொன்ராஜ், பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி சத்தியபுவனா ராஜேந்திரன், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் முத்துச்சாமி உட்பட பலர் உள்ளனர்.

### அக். 8ம் தேதி சிவகங்கை மாவட்ட மாணவரணி

## ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அறிவிப்பு!

சிவகங்கை, அக். 01 - சிவகங்கை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர் வழிகாட்டுதலின்படி எனது (மாவட்ட செயலாளர் கேஆர்.பெரியகருப்பன்) தலைமையில்,

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மற்றும் மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு, மாநில மாணவரணி துணைச் செயலாளர் திருமதி ஜெ. வீரமணி சிவகங்கை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சிவகங்கை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் வருகிற 8.10.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி அளவில் காரைக்குடி பஸ் நிலையம் அருகில் உள்ள அபூர்வ மகாலில் நடைபெற உள்ளது.

இந்த நேர்காணலில் ஒன்றிய,நகர, பேரூர், அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### செ.இராமலிங்கம் எம்.பி. – க.அன்பழகன் எம்.எல்.ஏ. முன்னிலை!

## கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் 119வது ஆண்டு பேரவைக் கூட்டம்!

### சு.கல்யாணசுந்தரம் எம்.பி, வரவேற்று சிறப்புரை!

தஞ்சாவூர், அக். 01 - கும்பகோணத்தில் உள்ள பழமையான கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் நிறுவனத்தின் 119 வது பேரவைக்கூட்டம், 120 ஆம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது.

119வது பேரவைக் கூட்டம் 29.09.2023 அன்று கும்பகோணம் காந்தியடிகள் சாலை, ராயா மஹாலில் நடைபெற்றது. கூட்டத்தில் நிதியின் துணைத் தலைவர் செ.இராமலிங்கம் எம்.பி, இயக்குனர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், பி.பிரகாசம், எஸ்.ஹரிஹரன், ஜி.துரைராஜ், இ.அம்பிகா, எம்.குரு பிரசாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்திற்கு வந்திருந்தோரை நிதியின் தலைவரும், தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் ராஜ்யசபா உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் வரவேற்று, நிதியின் செயல்பாடுகள் மற்றும் வணிக வளர்ச்சி குறித்து பேசினார்கள்.

நிதி நிறுவனத்தின் வரலாற்றில் இல்லாத அளவில் தமிழகமெங்கும் 119 கிளைகளுடன் செயல்பட்டு வரும் முன்னோடி நிறுவனம் (Pioneer in Industry) தமது கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி லிமிடெட் இந்திய அளவில் நிதி நிறுவனங்களின் வரிசையில் NDH4 அந்தஸ்து பெற்ற முதல் நிறுவனம்.

கடந்த ஆண்டுகளை போலவே 2022-23 ஆம் ஆண்டிலும் தங்கத்தின் விலையில் ஏற்றத்தாழ்வுகள் இருந்து வந்துள்ளது. இது பல நிதி நிறுவனங்களுக்கு பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தினாலும், நமது நிதியை எந்த விதத்திலும் பாதிக்காத வகையில் இயக்குநர் அவை அவ்வப்போது சிறந்த கொள்கை முடிவுகளை வகுத்து அதன்படி செயல்பட்டதன் காரணமாக நமது நிதி நிறுவனம் நகைக்கடன் வணிகத்தில் மிக பாதுகாப்பான நிலையை எட்டியுள்ளது.

கடந்த 31.03.2022 தேதியன்று ரூ.3,120 கோடியாக இருந்த வைப்பு நிதியானது ரூ.380 கோடி உயர்ந்து கடந்த 31.03.2023 தேதியன்று ரூ.3,500 கோடியாக அதிகரித்துள்ளது.

கடந்த 31.03.2022 தேதியன்று ரூ.2,860 கோடியாக இருந்த நகைக்கடன் ரூ.304 கோடி உயர்ந்து உயர்ந்து கடந்த 31.03.2023 தேதியன்று ரூ.3,164 கோடியாக அதிகரித்துள்ளது.

சென்ற 2021-22ல் ரூ.93.27 கோடியில் இருந்த நிகர லாபம் 2022-23 ரூ.8.57 கோடி அதிகரித்து பங்குதாரர்களின் ஒத்துழைப்போடு கோடிய உயர்ந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சென்ற ரூ.357.61 கோடியில் இருந்த மொத்த காப்பு பண இருப்பு ரிசர்வ் ஃபண்ட் 2022-23ல் மிக உன்னிப்பாக வரவு செலவு வளர்ச்சி விகிதங்களை கவனித்ததால் இந்த ஆண்டு ரூ.58.76 கோடி காப்பு பணம் உயர்த்தப்பட்டு மொத்த காப்பு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் பங்குதாரர்களுக்கு அதிக பட்ச பங்கு ஈவு தொகை 25 சதவிகிதம் வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம்.

பங்கு லாப டிவிடெண்ட் தொகை பங்குதாரர்களுக்கு எந்தவிதத்திலும் தாமதமின்றி வெகு விரைவாக சென்றடைய, அதிலும் சேமிப்பு கணக்கில் வரவு வைக்க நிலையாணை (Standing Instruction) கொடுத்தவர்களுக்கும், வங்கி கணக்குகளில் வரவு வைக்க கோரியுள்ளவர்களுக்கும் ECS (Electronic Clearing System) மூலம் உடனடியாக டிவிடெண்ட் தொகையை வரவு வைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறோம்.

பொது மேலாளர் தொடங்கி, கடைநிலை ஊழியர்கள் மற்றும் நகை மதிப்பீட்டாளர் உள்பட மொத்தம் சுமார் 1,000 ஊழியர்கள் பணிபுரிகின்றனர். நிதியின் ஊழியர்களுக்கு கடந்த 2022-23 ஆண்டிற்காக போனஸ் கருணைத் தொகையாக 75 சதவிகிதம் அதாவது சுமார் ரூ.24.12 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கு ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வந்த பொங்கல் பரிசு தொகை ரூ.1,000/ஐ கடந்த ஆண்டு முதல் ரூ2,000/ ஆகவும் மற்றும் ஊழியர் அவரவர் பணிபுரிந்த வருட கணக்கீட்டின்படி வருடம் ஒன்றுக்கு ரூ.100/ வழங்கப்பட்டு வந்த தீபாவளி பரிசு தொகையை ஆண்டு ஒன்றுக்கு ரூ.20 ஆக உயர்த்தியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிதியின் நகை மதிப்பீட்டாளர் தூய்மை பணியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் ஆகியோருக்கும் தீபாவளி தொகை கடந்த வருடங்களை காட்டிலும் அதிகமாக உயர்த்தி வழங்கப்பட்டுள் மகிழ்ச்சிக்குரியதாகும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக மக்களுக்கு சேவை செய்வது : குறைந்த வட்டியில் நகைக் கடன் வழங்குதல் ; மக்கள் நன்மதிப்புடன் வைப்பு நிதி சேகரித்தல் ; வாடகையின்றி பாதுகாப்பு பெட்டக வசதி போன்றவை இந்த நிறுவனத்தின் சிறப்பம்சங்களாகும்.

நமது நிதியில் செலுத்தப்படும் வைப்புத்தொகை அனைத்தும் மிகவும் பாதுகாப்பான வகையில் நகைக் கடன் வழங்குவதற்காக மட்டுமே பயன்படுத்தும் நிலையில் அனைத்து முதலீடுகளுக்கும் முழு பாதுகாப்பு உண்டு.

தற்போது தமிழகமெங்கும் 119 கிளைகளுடன் சிறப்பாக செயல்பட்டு வரும் நமது நிறுவனத்தின் புதிய கிளைகளை விரைவில் பல இடங்களில் திறப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கம்பெனிகள் சமுதாய பொறுப்பு (Corporate Social Responsibility) திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் இந்த நிறுவனம் மக்கள் நலன் சார்ந்த பல திட்டங்களுக்கும், கல்வி மேம்பாட்டிற்கும், சுத்தமான குடிநீர் வழங்குவதற்கும், மருத்துவம் சார்ந்த பல நலத்திட்டங்களுக்கும் இந்த ஆண்டு முழு தொகைகளையும் வழங்கி செலவு செய்து உதவி புரிந்து வருகிறது.

இந்த நிறுவனம் தமிழகத்தில் மேலும் பல புதிய கிளைகளை திறக்க உள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நிறுவனத்திற்கு அனைத்து வகையிலும் உதவிடும் வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள், வங்கியாளர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நிதியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு பேராதரவு தந்து உதவும் நிதியின் மதிப்பு மிக்க பங்குதாரர்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து ஒத்துழைப்பு நல்குமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

பேரவைக்கூட்டத்தில் குரு பிரசாந்த் மற்றும்.அம்பிகா ஆகியோர் நிதியின் இயக்குநர்களாக பங்குதாரர்களால் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் பங்குதாரர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி நிதியின் பதிவு அலுவலகம் 23 & 24, டாக்டர் பெசன்ட் ரோடு, கும்பகோணம் என்ற முகவரியில் புதிய பொலிவுடன் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

கூட்ட நிறைவில் நிதியின் மேலாண் இயக்குநர் பி.ஆர்.பி.வேலப்பன் நன்றி கூறினார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்து

## மாவட்ட, மாநகரச் செயலாளர்/பொறுப்பாளர் மற்றும் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் கவனத்திற்கு...

### தலைமைக் கழக அறிவிப்பு

1-1-2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட உள்ளது.

27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர,04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) 18.11.2023 (சனிக்கிழமை) மற்றும் 19.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன.

இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1-1-2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் - வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் - புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும்; தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. | வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் | 27-10-2023 |
| 2. | பெயர்களைச் சேர்க்க/ நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் | 27-10-2023 முதல் 09-12-2023 வரை |
| 3. | சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் | 04, 05-11-2023 18, 19-11-2023 |
| 4. | இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் | 01-01-2024 |

தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி, சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊர்க்கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச் சாவடி நிலைய முகவர்கள் (BLA2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட, மாநகரக் கழகச் செயலாளர்கள்/ பொறுப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் சிறப்பு அக்கறையோடு கழக அமைப்புகளை இப்பணியில் ஈடுபடுத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தப் பணி குறித்து கழக நிர்வாகிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை தலைமைக் கழகத்துக்கு அவ்வப்போது கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018,
நாள்: 30-09-2023.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



முதலமைச்சர் – கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க நெல்லை மண்டலத்திற்கு உட்பட்ட தி.மு.க. விவசாய அணி மாவட்ட மற்றும் மாநகர, தலைவர், துணை தலைவர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்த ஆலோசனைக் கூட்டம் தென்காசி மாவட்டம் குற்றாலம் சேனைத்தலைவர் திருமண மண்டபத்தில் தி.மு.க. விவசாய அணி செயலாளர், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது. உடன் தென்காசி தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன், வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்.எல்.ஏ., விவசாய அணி நிர்வாகிகள் அப்துல் காதர், முத்துராமலிங்கம், சிவக்குமார், மணி,டேம் வெங்கடேசன்,செல்லப்பா பொன்னையாபாண்டியன்,முருகன், மாடசாமி உள்பட பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் தும்பைப்பட்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்பு மற்றும் மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் இணைந்து நடத்திய மாபெரும் சிறப்பு கால்நடை மருத்துவ முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா மற்றும் அதிகாரிகள், கழகத்தினர் உள்ளனர்.



மதுரை தெற்கு மாவட்டம் தே.கல்லுப்பட்டி அருகில் உள்ள முத்தப்பன்பட்டியில் முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி இரா.முத்தையா அவர்களின் இல்லத்திலும், நினைவிடத்திலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன், திருமதி.சகுந்தலா சேடப்பட்டியார், திருமதி.பாரதி மணிமாறன், கழக நிர்வாகிகள் ஏர்போர்ட் பாண்டியன் மற்றும் பலர் உள்ளனர்.

### நெல்லையில் 6500 பயனாளிகளுக்கு

# ரூ.156 கோடி மதிப்பில் கடன் உதவி - மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்!

நெல்லை, அக்.01-

நெல்லை மாவட்ட நிர்வாகம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட அளவில் சிறப்பு கடன் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று 6500 பயனாளிகளுக்கு ரூ.156 கோடி மதிப்பில் கடன் உதவியும், மாற்றுத்திறனாளிகளுக்குமூன்றுசக்கரவாகனங்களையும் வழங்கினார்.

நெல்லைமாவட்ட ஆட்சியர்அலுவலககூட்டரங்கில் மாவட்ட அளவில் சிறப்பு கடன் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சியர்கார்த்திகேயன் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் பாளை சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப், மேயர் சரவணன், துணைமேயர்ராஜ், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்ஆகியோர்முன்னிலையில் நடைபெற்றது.

நிகழ்வில் நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பங்கேற்று 6500 பயனாளிகளுக்கு ரூ.156 கோடி மதிப்பில் கடன் உதவியும், மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்களையும் வழங்கி பேசியதாவது.

இந்தசிறப்புகடன்மூலம் மாணவர்கள், தொழிலாளர்கள், சிறுகுறு தொழில்நிறுவனங்கள் என ஏராளமானோர் பயன்படுகின்றனர்.

இதுபெரும்மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில்கடன்வழங்குதல்என்பது மிகப்பெரிய அங்கமாக உள்ளது. இதன் மூலம் நாட்டில் மறுமலர்ச்சியை உருவாக்கமுடியும். தமிழகத்தில் ஏழை, எளிய மக்கள், மாணவர்கள்உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில்ரூ.7லட்சம்கோடி கடன்வழங்கஇலக்குநிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூ.3 ½ லட்சம் கோடி (மூன்றரை லட்சம் கோடி)பட்ஜெட் போடும்நம்மாநிலத்தில்ரூ.7 லட்சம் கோடி கடன் வழங்குவது என்பது பொருளாதாரத்தில் மிகப்பெரிய வளர்ச்சியை எட்டும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.

நிகழ்வில் மாநகர செயலாளர் சுப்பிரமணியன், தலைமைச்செயற்குழுஉறுப்பினர்கள் ஆ.பிரபாகரன், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பொதுகுழு உறுப்பினர் பரமசிவஐயப்பன், நெல்லை கிழக்கு மாவட்டவழக்கறிஞர்அணி அமைப்பாளர்செல்வசூடாமணி, நெல்லை மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன், பாளை மண்டலதலைவர்பிரான்சிஸ் உள்படஅரசுஅலுவலர்கள், வங்கி மேலாளர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

### ரூ.20 கோடி மதிப்பீட்டில் நாமக்கல் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள்

# டிசம்பரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி தகவல்!

நாமக்கல், அக்.01-

நாமக்கல் நகராட்சி முதலைப்பட்டியில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியின் போது நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம் முன்னிலை வகித்தார்.

ஆய்வின் போது செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கூறியதாவது:-

நாமக்கல் நகராட்சி பகுதியில் வாழும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையும், பல்வேறு வியாபார அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியோரது நீண்ட நாள் கோரிக்கை நாமக்கல் நகரின் புறவழிச் சாலை மற்றும் புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டும் என்பதாகும். இரண்டு திட்டங்களும் நாமக்கல் மக்களுடைய நீண்ட நாள் எதிர்பார்ப்பாக இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்த பிறகு நாமக்கல் மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி ஆகியோர் நாமக்கல் நகராட்சி பகுதியில் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென வலியுறுத்தி வந்தனர்.

குறிப்பாக நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் சட்டமன்றத்தில் நாமக்கல் நகரத்திற்கு நீண்ட நாள் பிரச்சினையை தீர்த்து வைக்கின்ற வகையில் ஒரு புதிய பேருந்து நிலையமும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தி நகரத்திலே எளிதான போக்குவரத்திற்கு நாமக்கல் புறவழிச சாலையும் அமைந்திட வேண்டும் என கோரிக்கை வைத்ததன் அடிப்படையிலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடத்தில் தொடர்ந்து வலியுறுத்திய தன் அடிப்படையிலும், இன்றைய தினம் நாமக்கல் நகராட்சி சார்பாக ஏறத்தாழ ரூ. 20 கோடி அளவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதற்கான பணியாணை வழங்கப்பட்டு புதிய பேருந்து நிலையம் கட்டடப்பட்டு வருகிறது.

புதிய பேருந்து நிலைய கட்டுமான பணி ஏறத்தாழ 80 சதவீதம் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

இப்புதிய பேருந்து நிலையத்திற்கான கட்டுமான பணிகள் வருகின்ற டிசம்பர் மாதத்திற்குள் முடிவடைந்து, திறப்பு விழாவானது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது.

இந்த புதிய பேருந்து நிலையத்திற்கான அணுகு சாலை முதலைப்பட்டியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் அளவில் நெடுஞ்சாலை துறையின் கிராம சாலைகள் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ. 25 கோடி மதிப்பில் அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்படுகின்ற நிலையில் இருக்கிறது. இப்பேருந்து நிலையத்திற்கு புறவழிச்சாலையுடன் கூடிய அணுகு சாலை அமைக்கப்பட இருக்கிறது.

நாமக்கல் புறவழிச்சாலை திட்டமானது, ரூ194 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக, புறவழிச் சாலையில் 800 மீட்டரிலிருந்து இந்த புதிய பேருந்து நிலையத்திற்கு 200 மீட்டர் அளவில் அணுகு சாலை அமைக்கப்பட இருக்கிறது.

நாமக்கல் புறவழிச்சாலை திட்டத்தின் கீழ் 800 மீட்டர் தொலைவிற்கு நான்கு வழிச்சாலையாகவும், பேருந்துகள் எளிதாக வந்து செல்கின்ற வகையில் பேருந்து நிலைய அணுகு சாலை 200 மீட்டர் தொலைவிற்கு ஆறு வழிச்சாலையாகவும் அமைய இருக்கிறது. ஆக மொத்தம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்திற்கு புறவழிச் சாலையுடன் கூடிய அணுகு சாலை விரைவில் அமைக்கப்பட உள்ளது.

இந்த புதிய பேருந்து நிலையத்தின் மொத்த பரப்பளவு 12.89 ஏக்கர் ஆகும் ஏறத்தாழ 10 ஏக்கர் அளவில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. 50 பேருந்து நிறுத்தங்கள், 57 கடைகள், 2 உணவகங்கள், 7 பயணியர் காத்திருப்பு பகுதி, இரண்டு ஏ.டி.எம், மூன்று கட்டண கழிப்பிடங்கள், பொருள் வைப்பறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, இருசக்கர வாகன நிறுத்துமிடம், 60 நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், காவல் பாதுகாப்பு அறை, அலுவலக அறை உள்ளிட்ட பல்வேறு அதிநவீன வசதிகளுடன் புதிய பேருந்து நிலையம் அமைய உள்ளது.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடும் வகையில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள், நாமக்கல் புறவழிச்சாலை திட்டம் ஆகிய பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது நாமக்கல் நகர மன்ற தலைவர் து.கலாநிதி, நகர தி.மு.க. செயலாளர்கள் செ.பூபதி, சிவக்குமார், ராணா ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், துணை அமைப்பாளர் எம்பரர் வ.இளம்பரிதி, சங்கீதா, நகராட்சி ஆணையர் சென்னு கிருஷ்ணன், நெடுஞ்சாலைத்துறை கிராம சாலைகள் உதவி செயற் பொறியாளர் பரிமளா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர்.ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம் எல் ஏ, சுற்றுலாத் துறையின் மூலம் உலக சுற்றுலா தினத்தையொட்டி இராமநாதபுரம் அன்னை சத்யா ஆதரவற்றோர் குழந்தைகள் இல்லத்தில் உள்ள மாணவிகளுக்கு ஒரு நாள் விழிப்புணர்வு சுற்றுலா அழைத்துச் செல்லும் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாவட்ட ஆட்சித்தலைவர் விஷ்ணு சந்திரன், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம், துணை தலைவர் டி.ஆர். பிரவீன் தங்கம், இராமநாதபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் கே. டி.பிரபாகரன், மண்டபம் ஒன்றிய செயலாளர் கே ஜே பிரவீன் மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள் நிகழ்ச்சியில் மாணவ – மாணவியரின் சிலம்பாட்டம் பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.




சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் நடைபெற்ற புனித மைக்கேல்பொறியியல் கல்லூரி வெள்ளிவிழாவில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், வணிகவரி மற்றும் பத்திரபதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் 25ஆண்டுகள் பணிபுரிந்த பேராசிரியர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கினார்கள். உடன் கல்லூரி தலைவர் எம்.ஸ்டாலின்ஆரோக்கியராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த், கல்லூரி செயலர் பாத்திமாமேரி,சி.இ.ஒ.திருமதிபிரிட்ஜெட்நிர்மலா, முன்னாள் எம்.எல்.ஏ.வி.ராஜ சேகரன் ஆகியோர் உள்ளார்கள்.

### 21-ஆவது பன்னாட்டுக் கருத்தரங்கம்!

# மும்பையில் கலைஞர் நூற்றாண்டு விழா - கலைஞர் தமிழ் ஆய்வு மாநாடு!

## அமைச்சர்கள் செஞ்சி மஸ்தான், சா.சி.சிவசங்கர் சிறப்புரை! அலி ஷேக் மீரான் தலைமை!

மும்பை, அக்.01-

மும்பையின் நவிமும்பை தமிழ்ச் சங்கத்தில் வைத்து இன்று (01-10-2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிமுதல் மாலை வரையான பல்வேறு வகையான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம், மும்பை தமிழ் இலெமூரியா அறக்கட்டளை, ஔவைக்கோட்டம் திருவையாறு ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தவுள்ள நிகழ்வில் தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்த் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

புத்தகக் கண்காட்சி மகளிர் அரங்கம், இசையரங்கம், நாட்டியரங்கம் கருத்தரங்கம் கவியரங்கம் விருது வழங்கும் நிகழ்வு, பட்டிமன்றம் எனப் பல்வேறு நிகழ்வுகள் அடங்கிய பிரமாண்டமான இலக்கிய மாநாடாக மும்பையில் நிகழவுள்ள கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலைஞரின் புகழுக்கு காரணமாக விஞ்சி நிற்பது இன மீட்சியே ... மொழி மாட்சியே... என்ற தலைப்பில் நடைபெறவுள்ள பட்டிமன்றத்தினை தமிழ்நாடு அரசு இ.எஸ்..ஐ. மருத்துவமனைகளின் இயக்குநர் நற்றமிழ் நாயகர் மருத்துவர் ஜெய. ராஜமூர்த்தி நடுவராக இருந்து நடத்திக் கொடுக்கவுள்ளார்.

புரவலர் அலிசேக் மீரான் நிகழ்வுத்தலைமை ஏற்கிறார். மாநாட்டு இயக்குநர் முனைவர் மு.கலைவேந்தன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

தமிழ் இலெமூரியா அறக்கட்டளைத் தலைவர் சு.குமணராசன் கலைஞர் ஒரு கருத்துச் சுரங்கம் என்ற தலைப்பிலான கருத்தரங்கத்திற்கு தலைமையும், மராத்திய மாநிலத் தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் பாவரசு வதிலை பிரதாபன் கலைஞரின் திரைக்காவியம் என்ற தலைப்பிலான கவியரங்கத்திற்கு தலைமையும் ஏற்று நடத்தவுள்ளார்கள்.

முன்னதாக புத்தகக் கண்காட்சியை மும்பை புறநகர் தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்த குமார் தலைமையேற்று நடத்துகிறார். மற்றும் இயக்கம் சார்ந்த இலக்கியம் சார்ந்த அமைப்புகளைச் சார்ந்த பல நிர்வாகிகள் நிகழ்வில் முன்னிலை வகிக்கிறார்கள்.

மகளிர் பங்கேற்கும் சுழலும் சொல்லரங்கம் நிகழ்ச் நடைபெறும் சொல்லரங்கத்தின் நடுவராக தமிழ்ப் பேராசிரியர் முனைவர் ம. மணிமேகலை பங்கேற்கிறார்.

மும்பை சௌந்தர்ய நாட்டியக் கலாலயா பரதக் கலைச்சுடர் பத்மினி இராதாகிருஷ்ணன் மாணவிகளின் நாட்டிய நிகழ்ச்சி மற்றும் இராணி சித்ரா வழங்கும் திரைத்தமிழிசை நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

இதனை தொடர்ந்து நூல் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ்தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ் மஸ்தான், கலைஞர் ஒரு தமிழ்ச் சங்கம் ஆய்வுக் கோவை நூல் வெளியிட, அதனை மாநாட்டுப் புரவலர் ஜேம்ஸ் தேவதாசன் பெற்றுக் கொள்கிறார்.

ஆகச்சிறந்த தமிழ் அறிபாரி ஏற்புரையாற்றுகிறார்.

கலைஞர் ஒரு தமிழ்ச்சுரங்கம்' என்ற நூலில் கலைஞரின் தமிழ்ச்சுரங்கம், கவிதைச்சுரங்கம், கதைச்சுரங்கம், கலைச்சுரங்கம், பகுத்தறிவுச்சுரங்கம். பண்பாட்டுச் சுரங்கம், ஆளுமைச்சுரங்கம் பற்றிய தொகுப்புகள் இடம் பெற்றுள்ளன. எனவே அனைத்துத் தமிழன்பர்களும் நிகழ்வில் கலந்து மகிழும்படி மாநாட்டு நிர்வாகிகள் கேட்டுக்கொள்கிறார்கள்.

கலைஞரின் நூற்றாண்டு விழாவில் மும்பையைச் சேர்ந்த பல்வேறு தமிழமைப்பைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். காலையில் இருந்து மாலை வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்வின் இடையில் உணவு மற்றும் சிற்றுண்டியும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆற்காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்

# பி.என்.சுப்பிரமணியன் 8ஆம் ஆண்டு நினைவேந்தல்!



ஆற்காடு, அக்.01-

இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகரக் கழக அவைத் தலைவர் பி.என்.எஸ். இராஜசேகரன், இராணிப்பேட்டை மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் டாக்டர் பி.என்.எஸ். சரவணன் ஆகியோரின் தந்தையும் ஆற்காடு நகரக் கழகச் செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவரும், வேலூர் மாவட்ட முன்னாள் பொருளாளரும், தணிக்கைக் குழு முன்னாள் உறுப்பினரும், ஆற்காடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான பி.என். சுப்பிரமணியன் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி இன்று (1.10.2023-ஞாயிறு) அன்னாரது இல்லத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.

அன்னாரது நினைவு நாளில் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்துகின்றனர்.

### தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரிப்பு!

சென்னை, அக்.1-

தமிழ்நாட்டில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகரிப்பு காரணமாக இன்று முதல் நாள்தோறும் காய்ச்சல் தடுப்பு முகாம் நடத்த பொது சுகாதாரத்துறை உத்தர விட்டுள்ளது. இது தொடர்பாக அனைத்து மாவட்ட சுகாதார இயக்குனர்களுக்கு பொது சுகாதாரத்துறை இயக்குனர் செல்வ விநாயகம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.


'அதில்,"தமிழ்நாட்டில் மழை காரணமாக சில மாவட்டங்களில் காய்ச்சல் மற்றும் டெங்கு பாதிப்பு அதிகரித்து வருகிறது. இதனால் மருத்துவமனைகளில் கூட்டம் காணப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு இன்று முதல் 1000 இடங்களில் நாள்தோறும் இலவச காய்ச்சல் முகாம் நடத்த வேண்டும்," என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்ட கிராமங்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் பகுதிகளில் காலை 9 மணியில் இருந்து 4 மணி வரை முகாம்களை நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகளுக்கு சென்று மாணவர்கள் இடையே காய்ச்சல் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாணவர்களுக்கு காய்ச்சல், தலைவலி உள்ளிட்ட அறிகுறிகள் தெரியவந்தால் உடனடியாக உரிய சிகிச்சை பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் மறு உத்தரவு வரும் வரை காய்ச்சல் முகாம்களை தொடர்ந்து நடத்தவும் உத்தரவு பிறப்பிக்க ப்பட்டுள்ளது. டெங்கு காய்ச்சல் பாதிப்பை கண்காணிக்கசிறப்புஅதிகாரிகளை சுகாதாரத்துறை நியமித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி.என். சுப்பிரமணியன்

### அக்டோபர் 1 (2015)



1956ஆம் ஆண்டில் கழக உறுப்பினராகி கழகப் பணியாற்ற துவங்கினார்.

25 ஆண்டுகள் தொடர்ந்து ஆற்காடு நகரச் செயலாளராகவும், 8 ஆண்டுகள் மாவட்டப் பொருளாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர். அத்தோடு, பத்து ஆண்டுகள் தலைமை தணிக்கைக் குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

1996ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### அமைச்சர் கீதா ஜீவன் முன்னிலை!

# உலக இருதய தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நடைபயண பேரணி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்!

தூத்துக்குடி, அக்.01-

உலக இருதய தினத்தை முன்னிட்டு மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கம் தூத்துக்குடி சார்பில் பெல் ஹோட்டல் அருகில் மருத்துவக்கல்லூரி மாணவர்கள், மாணவியர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்து கொண்ட விழிப்புணர்வு நடைபயண பேரணியை சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் முன்னிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் 29.09.2023 அன்று கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்ததாவது:

உலக இருதய தினம் என்பது செப்டம்பர் 29-ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2000-ஆம் ஆண்டு வேர்ல்டு ஹெல்த் பெடரேஷன் அமைப்பின் சார்பில் அதன் தலைவரான அண்டனி பாய் கிருனா அவர்களால் உலக இருதய தினம் உருவாக்கப்பட்டு உலகம் முழுவதும் தொடர்ச்சியாக 23 ஆண்டுகள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இருதய பாதுகாப்பு அவசியமான ஒன்று என்பது மருத்துவ மாணவர்கள், பேராசிரியர்களுக்கு நன்றாக தெரியும். கொரோனா தொற்றுக்கு பிறகு பெரிய அளவில் இருதய பாதிப்பு ஏற்பட்டு வருவதை உலகம் உணர்ந்திருக்கிறது. முன்பு மாரடைப்பு 40, 50, 60 வயதை கடந்தவர்களுக்குதான் வரும் என்று சொல்வார்கள். ஆனால் இன்று 40, 50, 60 வயதுக்குள்ளேயே மாரடைப்பு வருகிறது.

உலக சுகாதார நிறுவனம் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம் போன்றவை இருதய நோய்க்கான காரணங்களை தொடர்ச்சியாக ஆராய்ச்சி செய்து வருகிறது. இருதய நோயில் இருந்து நம்மை எப்படி பாதுகாத்துக் கொள்வது, நமது வாழ்க்கை முறையை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதுதான் இந்த உலக இருதய தின நிகழ்ச்சியின் நோக்கமாகும். இத்தினத்திற்கான இந்த ஆண்டு கருப்பொருள் இதயத்தை பயன்படுத்தி இதயத்தை அறிந்துகொள் என்பதாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் ஜப்பான் சென்றிருந்த போது டோக்கியோவில் 8 கி.மீ. தூரத்திற்கு அமைக்கப்பட்டிருந்த ஹெல்த் வாக் சாலையை பார்த்தேன். இந்த சாலையை பற்றி கேட்கும் போது, ஹெல்த் வாக் சாலையை பார்ப்பவர்கள் இந்த சாலையில் மட்டுமல்ல நமது வீட்டின் அருகிலும் 8 கி.மீ. தூரத்திற்கு நடக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை தரும் என்று சொன்னார்கள்.

உடனடியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் ஹெல்த் வாக் நடைபாதையை தேர்வு செய்திருக்கிறோம். சாலையின் இருபுறமும் மரங்கள் நடுதல், ஒவ்வொரு கி.மீ. தூரத்திற்கும் நேரம் அறிவிப்பு வைப்பது, நடப்பதன் பயன்கள் பற்றி பதாகைகள் வைப்பது,ஒவ்வொரு 2 கி.மீ. தூரத்திலும் அமர்வதற்கு இருக்கைகள் அமைப்பது போன்ற பணிகள் முடிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் அக்டோபர் மாதத்தில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் ஹெல்த் வாக் சாலை திறக்கப்படவுள்ளது.

நாம் நடப்பதை ஊக்கப்படுத்த வேண்டும். நடைப்பயிற்சி உடலுக்கு மிகவும் தேவையான ஒன்று. அவசியமான ஒன்று. அந்த வகையில் தான் முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடப்பதற்கு சாலைகளை அமைக்கிறார்.

தமிழகம் முழுவதும் இருதய நோயினால் ஏற்படும் உயிரிழப்பினை தடுக்கும் பொருட்டு 27.06.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், மலுமிச்சம்பட்டி ஊராட்சியில் இதயம் காப்போம் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையம்ä துணை சுகாதார நிலையங்களள் என 10,999 மருத்துவமனைகளிலும் இருதய பிரச்சினைக்கு ஆஸ்பிரின் - 2, க்ளோபிடோக்ரல் - 4, அட்ரோவாஸ்டாட்டின் - 8 என மொத்தம் 14 மாத்திரைகள் வழங்கப்படுகிறது. எனவே இருதய பிரச்சனை தொடர்பாக ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு சென்று இதயம் காப்போம் திட்டத்தில் பயன்பெறலாம் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்ததாவது:

இருதய பிரச்சினை தொடர்பாக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். தனியார் மருத்துவமனை போன்று அரசு மருத்துவமனைகளிலும் மாரடைப்பை தடுப்பதற்கு மருந்துகள் இருக்கிறது. அளவான உணவு, சத்தான உணவு, அளவான உடற்பயிற்சி என்று நமது உடலுக்கும், இருதயத்திற்கும் குறைவான வேலை கொடுத்தால் நீண்ட நாள் வாழ முடியும்.

புரோட்டாவும், பார்கரும் சாப்பிடக்கூடாது. அதனால் உடலுக்கு கேடுதான் விளையும். இவற்றை என்றைக்காவது சாப்பிடலாம். தினமும் சாப்பிடக்கூடாது. துரித உணவுகள் எடுத்துக்கொள்ளக்கூடாது. நாம் விழிப்புணர்வை பெறுவோம். உடல்நலனை பாதுகாத்துக்கொள்வோம் என சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் 10 இடங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா!

## அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பேட்டி



மதுரை, அக்.01-

தமிழ்நாட்டில்சென்னை, ஓசூர், கோவை உள்ளிட்ட 10 இடங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் 'கனெக்ட் மதுரை 2023' தகவல் தொழில் நுட்பத்துறை வளர்ச்சி குறித்த கருத்தரங்கம் மதுரை அழகர்கோவில் சாலையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், டான்சிம் சிஇஓ சிவராஜா ராமநாதன், தகவல் தொழில் நுட்பத்துறையின் ஒன்றிய, மாநில அதிகாரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர்.

கருத்தரங்கம் முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் கூறியதாவது: புதிய தொழில் முனைவோருக்கு தமிழக அரசின் சார்பில் பல்வேறு உதவிகள் செய்யப்படுகிறது. தமிழக அரசின் தொழில் கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. கொரோனா காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் வேலை இழப்பு ஏற்பட்டது. இருந்தாலும் தமிழ்நாட்டில் சென்னை போன்ற இடங்களில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சியுடன் செயல்பட்டன. மதுரை உள்ளிட்ட தமிழகத்தில் ஏற்கனவே உள்ள தகவல் தொழில்நுட்ப பூங்காக்களில் புதிய நிறுவனங்கள் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை, ஓசூர், கோவை உள்ளிட்ட தமிழ்நாட்டின் 10 இடங்களில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பத்துறை வளர்ச்சிக்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய அறிவிப்புகளை விரைவில் வெளியிட உள்ளார். கங்கைகொண்டான், நாகர்கோவில் உள்ளிட்ட இடங்களில் தகவல் தொழில்நுட்பத்துறை சார்பாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் தொய்வின்றி செயல்படுத்தப்படும். மதுரையில் ரூ.600 கோடியில் அறிவிக்கப்பட்ட எல்காட் தகவல் தொழில்நுட்ப பூங்கா திட்டம் தொடர்பாக நீதிமன்றத்தில் இருந்த வழக்கு முடிவுக்கு வந்துள்ளது. இதனால் அத்திட்டம் விரைவில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# "மின்னும் மன்னை" மன்னார்குடியில் புதிய பேருந்துநிலைய பணிகள்

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டார்

திருவாரூர், அக்.01-

மின்னும் மன்னை திட்டத்தை அமல்படுத்தி மன்னார்குடியை மேம்படுத்தும் பணிகளில் முதல்வர் முக.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி மன்னார்குடியில் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் நடைபெற்றுவருகிறது. இதனை தமிழ்நாடு அரசின் தொழில் முதலீட்டு மற்றும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பார்வையிட்டார். அப்போது நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், நகர செயலாளர் வீரா கணேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

மின்னும் மன்னை திட்டத்தினை செயல்படுத்தி மன்னார்குடி தொகுதியினை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பல்வேறு துறைகளில் முன்னிறுத்திவருகிறார். இந்த திட்டத்தின் ஒருபகுதியாக பழைமையாக இருந்து வந்த மன்னார்குடி பேருந்து நிலையத்தை மாற்றி அமைக்க தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி ரூபாய்46.50 கோடிகளில் புதிய நவீன பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றுவருகிறது.

முற்றிலும் நவீனமயத்துடன் அமைக்கப்படும் இந்த பணிகளை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா மிகுந்த அக்கறையோடு தவறாமல் கண்காணித்து வருகிறார். அதன் தொடர்ச்சியாக நேற்று புதிய பேருந்துநிலைய பணிகளை பார்வையிட்டு பொறியாளர்கள் மற்றும் வணிகர்கள், பொதுமக்களுடன் ஆலோசனைகள் நடத்தினார்.அப்போது பணிகளை தரமுடனும் விரைவாகவும் முடிக்கவும் கேட்டுக்கொண்டார்.

தொழில் முதலீட்டு மற்றும் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் இந்த ஆய்வின்போது நகர செயலாளர் வீரா கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த் மாவட்ட அயலக அணி அமைப்பாளர் ஆர்.வி.ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.கே.முருகானந்தம் ஆகியோர் உடன் இருந்தனர்.

### இராமநாதபுரத்தில் - 14 படகு உரிமையாளர்களுக்கு

# முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ரூ.56 லட்சம்!

## காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலையில் வழங்கல்!

இராமநாதபுரம், அக்.1-

மீனவர்களின் படகுகள் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டு பாதிப்படைந்த 14 படகு உரிமையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் ரூ.56.00 இலட்சம் நிவாரணத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 29.09.2023அன்று மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூலம் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்ட படகு உரிமையாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியுதவி திட்டத்திலிருந்து நிதியுதவி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம் முன்னிலை வகித்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணு சந்திரன் , தலைமையேற்று பாதிக்கப்பட்ட படகு உரிமையாளர்களுக்குமுதலமைச்சரின் பொது நிவாரண நிதியி லிருந்து நிவாரண தொகைக்கான காசோலையினை வழங்கினார்கள்.

இதில் இராமநாதபுரம் மாவட்டத்தில் விசைப்ப டகுகள் உரிமையாளர்களுக்கு தலா ரூ.5 இலட்சம் விதம் 10 பயனாளிகளுக்கு ரூ.50.00 இலட்சத்திற்கான காசோலையினையும், 04 நாட்டுப் படகுகள் உரிமையாளர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் வீதம் 4 பயனாளிகளுக்கு ரூ.6 இலட்சத்திற்கான காசோலையினையும் என மொத்தம் 14 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.56.00 இலட்சத்திற்கான நிவாரணத்தொகையினை மாவட்ட ஆட்சித்தலைவர் பா.விஷ்ணுசந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மீன்வளத்துறை உதவி இயக்குநர்கள் கோபிநாத், ஜெயக்குமார், அப்துல் காதர் ஜெய்லாணி மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், குன்னூர் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரனை புதிதாக நியமிக்கப்பட்ட மகளிர் அணி நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

# கலையுலகக் குரிசிலே; காலத்தின் பரிசிலே; நிலையுலகம் வாழ்கவே; நெடும்புகழ் வளர்கவே!



சின்னய்யா கணேசன்நீ
சிவாஜி கணேசனெனப்
பின்னாளில் பேர்பெற்றாய்;
பெரும்புகழ் நேருற்றாய்!
நன்னாளது, அண்ணாவின்
நாடகத்தில் மராட்டியமா
மன்னனாம் சிவாஜி
மாவீரன் வேடத்தில்
நன்நூறு பக்கத்து
நற்றமிழ் உரையாடல்
பன்நூறு கருத்துகள்
பளிச்சிடப் பேசியே
முன்எவரும் காட்டாத
முழுநடிப்புத் திறங்காட்டத்
தன்மானத் தந்தையார்
தமிழ்ப் பெரியார் வியந்துபோய்
இன்றுமுதல் சிவாஜிநீ
என்றியம்பப் பெரியார்சொல்
நன்றாகப் பலித்தது;
நாடெங்கும் ஒலித்தது!
நின்றது; நிலைத்தது;
நெடும்புகழ் நிறைத்தது!

அண்ணாவின் அருள்பெற்றோர்
அத்தனை பேர்களும்
எண்ணாத உயரத்தை
எட்டியே உயர்கின்றார்!
அண்ணாவின் நாடகத்தில்
அன்றுநீ நடித்ததனால்
நண்ணினாய் நற்பெயர்;
நாடகம்போய்த் திரைப்படத்தில்
விண்ணளாவ உயர்ந்துவிட்டாய்;
விரிகதிராய் ஒளிர்கின்றாய்!

மண்ணாளும் உரிமையில்லை;
மணிமகுடம் சூடலில்லை;
எந்நாளும் சூத்திரன்
ஆளுதற்கு இடமில்லை;
ஒண்ணாது சாத்திரம்;
ஒப்பாது சூத்திரம்;
பண்ணாத இடையூறு
பரப்பிய ஆரிய
உண்ணோக்கச் சூழ்ச்சியை
உடைத்தெறிந்து ஆட்சியில்
திண்மையாய் அமர்ந்த பெருந்
திராவிட சிவாஜியை
அண்ணா படைத்திட
அதற்குநீ உயிர்கொடுத்தாய்!

பராசக்தி, திரையுலகப்
பாதையைத் திறந்தது;
வராசக்தி வந்தது;
வல்லமை வளர்ந்தது!
திராவிடக் கலைஞர்தான்
தீட்டிய உரையாடல்
பராசக்தி கல்;அது
பேசாது எனப்பகர்ந்த
சிராய்ப்பிலா உன்பேச்சு
செந்தழல் பொன்வீச்சு!
பராவிற்று நாடெலாம்;
பாய்அரிமாப் பீடெலாம்
விராவிய தெங்கெங்கும்;
விடிந்தது கங்குலெங்கும்!
பராபரமே என்றிருந்தோர்
பகுத்தறிவு வெளிச்சந்தான்
சரேலெனப் பாய்ந்திடத்
தன்மானம் ஒளிர்ந்தது!

கலையுலகம் உன்னிரு
கால்களும் பட்டபின்தான்
நிலையுயர்ந்து நின்றது;
நெடும்பழமை அகன்றது;
மலையுயர்ந்து நிற்பதுபோல்
வான்பரந்து செல்வதுபோல்
அலைகடல் ஆழ்வதுபோல்
அனற்கதிர் ஒளிர்வதுபோல்
நிலம்பொழில் செழிப்பதுபோல்
நீர்,காற்று உலவுதல்போல்
தலைநிமிர்ந்து எழுந்தது;
தமிழ்த்திரை உயர்ந்தது!

ஒன்பதுமெய்ப் பாடுகள்
உரைக்கும்தொல் காப்பியம்!
ஒன்பதும் உன் நடிப்பிலே
உருவேற்றி உணர்த்தினாய்;
ஒன்பதுக்கு மேலுந்தான்
உண்டெனின் அவற்றையும்
நன்றாக உளப்படுத்தி
நயமாக வெளிப்படுத்தி
பொன்றாத நிலையிலே
பொலிகின்ற தோன்றலே!
என்றுமே இலகிடும்
நடிகருள் திலகமே!

இன்றுனது நடிப்பினை
எடுத்தாய்ந்து பார்த்தாலோ
ஒன்றாகப் பத்தாக
ஒருநூறும் ஆயிரமாய்க்
குன்றாத இலக்கமாய்க்
கோடியாய்ப் பெருகியே
நின்றோங்கி மேலெழும்;
நிலைத்திடும்உன்
கலைத்திறன்!

திருப்பூர்க் குமரனாய்,
செக்கிழுத்த சிதம்பரனாய்,
துரத்தவே வெள்ளையரைத்
தூக்குற்ற பொம்மனாய்,
அரட்டலுக்கு அஞ்சாத
அடலேறு மனோகரனாய்,
உருட்டலுக்குப் பணியாத
உத்தம புத்திரனாய்,
திரும்பிப்பார் வில்லனாய்,
தில்லானா மோகனாம்பாள்
விரும்பிடும் கலைஞனாய்,
வியட்நாம்வீடு அய்யராய்,
அருவிபோல் பேசிடும்
அழகான இராசாவாய்
உருகியே வாழ்ந்திடும்
ஓர்உயர்ந்த மனிதனாய், அரும்பி
டும் காதலின்
அழகழகு நாயகராய்,
திருவருட் செல்வராய்,
செவ்வேளாய், புலவராய்,
திருவிளையாடல் சிவனாய்,
சிரிப்பூட்டும் நகையனாய்,
பரதனாய், திருமாலாய்,
பாரதியாய், கர்ணனாய்,
திரிசூலம் தெய்வமகன்
திகழ்கின்ற மூவராய்,
ஒருபடத்தில் ஒன்பது வேடங்கொள்
உருவனாய்,
இருவருள்ளம் புழுங்கிடும்
இதயமுள்ள கணவனாய்,
அரங்கனாய்,பாசமலர்
அண்ணனாய், பாவரிசைச்
சுரங்கமாய்ப் பற்பல
தோற்றங்கள் பூண்டநீ
விரிவாக எத்தனையோ
வியத்தகு மாந்தர்கள்
அரிதான உன்நடிப்பால்
அமரதீபம் போல்முதல்
மரியாதை பெற்றிங்கு
மக்களுளம் இருக்கவிட்டாய்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

ஒவ்வொரு மாந்தரும்
உயிருடன் உலவுகிற
அவ்வொரு மாண்பினை
அளித்த உன் ஆற்றலை,
செவ்விய பெருந்திறனைச்
செய்ய ஒரு நடிகர்தான்
இவ்வுலகில் பிறக்கவில்லை
இதுவரையில்! இனிமேலும்
எவ்வித வாய்ப்புமில்லை;
என்றென்றும் வாய்மையிது!

திரையுலகில் உனைவீழ்த்தத்
திட்டமிட்டோர் வெல்லவில்லை;
இரையாக்க முயன்றவர்கள்
இரண்டகம் செல்லவில்லை;
உரையாடல் உனைப்போல
ஒருவரும் சொல்லவில்லை;
அரைத்தமாவை
அரைத்துவாய்
அவலாக மெல்லவில்லை!

கரைமீறிப் பெருகுகிற
காவிரிபோல் நடிப்பிலே
வரையாக உயர்ந்தவன்நீ;
வானாகப் பரந்தவன்நீ;
திரைகடலாய் ஆழ்ந்தவன்நீ;
தீயாக வளர்ந்தவன்நீ;
விரைகாற்றாய் எழுந்தவன்நீ;
விண்கதிராய் ஒளிர்ந்தவன்நீ;
நுரைநிலவாய்க்
குளிர்ந்தவன்நீ;
நூறாக மலர்ந்தவன்நீ;
நரைகாணாத துன்நடிப்பு!
நாயகனே, நற்றவனே!

பகுத்தறிவுக்கு ஒவ்வாத
பழம்புராணப் படங்களோ
மிகுதியில்லை என்றாலும்
மேன்மையாம்உன்
நடிப்பாலே
அகத்தினைக் கவர்கின்றாய்;
ஆட்கொண்டு திகழ்கின்றாய்;
முகத்திலே ஆயிரமாய்
முகிழ்த்திடும் உணர்ச்சிகளை
இகத்திலே இன்னொருவர்
என்னதான் முயன்றாலும்
நிகழ்த்தவே முடியாது;
நினைக்கவும் இயலாது!
வகைவகையாய் எத்தனையோ
வண்ணநடை நடந்துநீ
திகைப்பளித்தாய்; நடிகரெலாம்
திருவடிகள் வாழ்கவென்றார்!

வாடிய பயிர்கண்டு
வாடிய வள்ளலார்போல்
தேடியே சென்றுநீ
செய்தவை எவ்வளவோ!
நாடியே வந்தவர்க்கு
நல்கியவை எவ்வளவோ!
ஆடியே நாடகங்கள்
அளித்தவை எவ்வளவோ!
நீடிய வாழ்விலே
நீட்டியவை எவ்வளவோ!
கோடிகள் கொடுத்தும்நீ
கூறாமல் விட்டதனால்
பேடிகள் பிதற்றுகின்றார்
பெருங்கருமி நீயென்று!

வள்ளுவர்க்குச் சிலைவைக்க
வாரியே வழங்கியவன்;
பள்ளிகளில் மாணவர்கள்
பகலுணவுக்கு ஓரிலக்கம்;
வெள்ளங்கள் வரும்போதுன்
வீடுபெரும் உணவகம்;
எல்லையிலே போரெழ
எடுத்தளித்த கொடையுளம்;
இல்லையில்லை என்னாமல்
ஈந்தாலும் கைக்கூலிச்
சில்லரைகள் கருமியெனத்
திட்டமிட்டே பரப்பினும்
கள்ளமே அறியாத
கைக்குழந்தை போலவே
உள்ளமுனக்கு உயர்ந்ததனால்
உதறியே நடந்தவன்நீ!

சூழ்ச்சியினை அறியாத
தூயவன்நீ, ஏனோஓர்
ஆழ்கடல் அரசியல்
ஆகாதென்று அறியாமல்
தாழ்ச்சியினைக் கண்டாலும்
தளராமல் என்றுமே
நீழலாய்ப் பலருக்கும்
நெடுங்காலம் இருந்தவன்நீ!
சூழ்ந்தவரே உனக்கெதிராய்ச்
சூதுகள் செய்ததனால்
வீழ்ந்தாலும் நீயொரு
வெண்தந்த வேழந்தான்!
ஆழ்ந்துதான் பார்த்தாலோ
அரசியலில் சென்ற இடம்
மூழ்குகின்ற கப்பலென
முடிவிலும் உணரவில்லை;
வாழ்ந்திருக்க வேண்டுமிடம்
வஞ்சகத்தால் விட்டுவிட்டாய்!

தாழ்ந்தாலும் மேன்மக்கள்
தந்நிகர் அற்றவரே!
காய்ந்தாலும் மலையென்றும்
கருகித்தான் போவதில்லை;
சாய்ந்தாலும் கோபுரம்
சன்னதி வீழ்வதில்லை;
தீய்ந்தாலும் பொன்னென்றும்
செப்பாக ஆவதில்லை;
தேய்ந்தாலும் வெண்ணிலா
திரும்ப ஒளி திகழுமன்றோ!
ஓய்ந்திடாமல் எப்போதும்
உருவெடுக்கும் சிவாஜிநீ
ஆய்ந்தாலோ என்றுமே
ஆதவன் அல்லவோ!

சிலையுனக்குக் கடற்கரையில்
சிறப்பாக நிறுவிய
கலைஞருடன் வளர்ந்தவன்நீ;
கடைசிவரை உயிர்நண்பன்!
புலையர்தாம் உன்சிலையைப்
போயகற்றிப் புன்மைசெயத்
தலைவருளம் குளிரவே
தளபதிதான் மீண்டுமுன்
சிலையினை எல்லோரும்
சீராகக் காணவே
நிலையாக நல்லிடத்தில்
நிறுவியே நடிப்பெனும்
கலைமகன், தலைமகன்
காண்கென வாழ்த்துகின்றார்!

கலைக்கொரு பல்கலைக்
கழகம்நீ! என்றாலோ
மலைப்பவர் யாருமில்லை;
மகிழாத பேருமில்லை!
தலைக்கொரு தோற்றத்தைத்
தந்துன்றன் நடிப்பாலே
நிலைக்குப் பலபாவம்
நீர்மையாய்க் காட்டிடும்
கலையுலகக் குரிசில்நீ!
காலத்தின்
பரிசில்நீ!
அலைஅலையாய்ப்
பிறந்தநாள்
அடுத்தடுத்துப் பெருகியே
நிலையாக வாழ்கவே;
நீடுபுகழ் வளர்கவே!



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், ஓடைப்பட்டி ஊராட்சி, கொங்கபட்டியில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடை கட்டடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு நேற்று முன்தினம் (29.09.2023) திறந்து வைத்து. பயனாளிகளுக்கு குடிமைப் பொருட்களை வழங்கினார். அருகில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் செள.சரவணன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.அய்யம்மாள் உட்பட பலர் உள்ளனர்.

### எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில்\

# தமிழ்நாட்டில் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார் முதல்வர்!

## ஒட்டன்சத்திரத்தில் திட்ட பணிகளை துவக்கி வைத்து அமைச்சர் அர.சக்கரபாணி பேச்சு!

திண்டுக்கல், அக். 01-

எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட வேண்டும் என்ற வகையில் பொற்கால ஆட்சியை தமிழகத்தில் நடத்தி வருகிறார் தமிழக முதல்வர் என்று உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திட்ட பணிகளை ஒட்டன்சத்திரத்தில் துவக்கி வைத்து பேசினார்.

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் ரூ.2.02 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்ட பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். மேலும் ரூ.7.60 கோடி மதிப்பில் புதிய திட்டங்களை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அதை தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலேயே தலைசிறந்த முதல்வராக திகழ்கிறார். தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் வகையில் தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். மகளிர் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். சிந்தலப்பட்டி ஊராட்சியில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டப்பட்டு இருக்கிறது. மேலும் திருமண நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக புதிய கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆதிதிராவிடர் மக்களுக்கு சுமார் 4 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த இடத்தில் 100 ஆதிதிராவிடர் மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் திருமண மண்டபம் விரைவில் கட்டிதரப்படும். மேலும், நமக்கு நாமே திட்டத்தில் பல்வேறு இடங்களில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகிறது.

#### தகுதியுடைய அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்போது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை கொண்டு வந்துள்ளார். மாதம் ரூ.1000 வழங்கும் திட்டத்தில் இந்த ஊராட்சியில் 658 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். இதில் 456 குடும்ப அட்டைதாரர்கள் பயனடைந்துள்ளார்கள். கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறாதவர்கள் இ-சேவை மையத்தில் பதிவு செய்ய வேண்டும். தகுதி உடைய அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்த உடனே கொரோனா காலத்தில் வாழ்வாதாரம் இழந்த 2 கோடி 9 இலட்சம் மக்களுக்கு ரூ.4000 வழங்கினார். மகளிருக்கு நகர பேருந்தில் கட்டணமில்லா பயண சேவை வழங்கப்பட்டு வருகிறது.

முதியோர் உதவித் தொகை ரூ.1000 லிருந்து ரூ.1200 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை ரூ.1000 லிருந்து ரூ.1500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. பெண்கல்வியைப் போற்றும் விதமாகவும், உயர்கல்வியை உறுதி செய்து இன்றைய பெண் சமூகம் நாளைய தமிழகத்தை தாங்கும் அறிவியல் வல்லுநர்களாகவும், மருத்துவராகவும், பொறியாளராகவும், படைப்பியலாளராகவும், நல்ல குடிமக்களை பேணும் உயர்கல்வி கற்ற பெண்களாகவும், கல்வியறிவு, தொழில்நுட்பம் நிறைந்த உழைக்கும் சமூகத்தைச் சார்ந்தவராகவும். உருவாக அடித்தளமாக "புதுமைப் பெண்" என்னும் உன்னத திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

அரசு பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 31,000 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 18.50 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர்.

#### குடிநீர் தட்டுப்பாடு வராது!

ஒட்டன்சத்திரம், பழனி சட்டமன்றத் தொகுதிக்கு காவிரி நீர் ஆதாரத்தைக் கொண்டு கூட்டுக்குடிநீர் திட்டம் செயல்படுத்த ரூ.1000 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. இந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் வரும் 30 ஆண்டு காலங்களுக்கு இங்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாது. அந்த வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. பெண்கள் படிக்கின்ற 2 கல்லூரிகள் கொண்டு வரப்பட்டுள்ளன. அடுத்தாண்டு ஒட்டன்சத்திரத்தில் ரூ.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும். உயர்கல்வித்துறையின் மூலமாக ஆண்கள் பெண்கள் படிக்கின்ற அரசு கல்லூரி கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. விருப்பாட்சியில் தொழிற் பயிற்சி கல்லூரி ரூ. 7 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

காளாஞ்சிபட்டியில் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு நடத்தும் போட்டி தேர்வுக்காக தயார் செய்ய பயிற்சி மையம் அமைய உள்ளது. ஆட்சிப் பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் தமிழகத்தில் இதுவரை சுமார் 15 லட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள், நோயாளிகள் என நியாய விலை கடைக்குச் செல்ல முடியாதவர்கள், பொருட்கள் வாங்க வேறு ஒரு நபரை நியமித்து விண்ணப்பம் அளித்தால், அந்த நபரிடம் பொருட்கள் வழங்கப்படும். தமிழ்நாட்டில் 1.50 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. பரப்பலாறு அணை தூர்வார வேண்டும் என்ற நீண்டகால கோரிக்கை ஏற்று இப்பணிகள் நடைபெற விரைவில் ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு பணிகள் தொடங்கப்படவுள்ளது. இந்த ஊராட்சிகளில் சுமார் 55 பணிகள் ரூ.1.45 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்றுள்ளது. குடிநீர், தெருவிளக்கு வசதி, கல்வி, பேருந்து வசதி, சுகாதாரம், சாலை வசதி, உணவு உள்ளிட்ட அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் சிந்தலப்பட்டி, ஓடைப்பட்டி, குத்திலுப்பை, எல்லப்பட்டி, மார்க்கம்பட்டி, சின்னக்காம்பட்டி, இடையகோட்டை, வலையபட்டி, ஜோகிபட்டி, புளியமரத்துக்கோட்டை, புலியூர் நத்தம், கேதையுறம்பு, வெரியப்பூர், ஜவ்வாதுபட்டி ஆகிய பகுதிகளில் ரூ.2.02 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப்பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பழனி வருவாய் கோட்டாட்சியர் . செள.சரவணன், ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் மு.அய்யம்மாள், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் முத்துச்சாமி, ஒட்டன்சத்திரம் ஒன்றிய செயலாளர் ஜோதிஸ்வரன் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள நகரம், ஒன்றிய, பேரூர் ஆகிய பகுதிகளில் தி.மு.க மாணவர் அணியின் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் வாணியம்பாடி அடுத்த தனியார் திருமண மண்டபத்தில் நடந்தது. திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ, மாநில மாணவரணி செயலாளர் காஞ்சிபுரம் சி.வி எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாநில மாணவரணி துணை செயலாளர்கள் சேலம் ரா.தமிழரசன், கா.அமுதரசன் ஆகியோர் நேர்காணல் நடத்தினார்கள். இதில் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள 4 நகரம், 14 ஒன்றியம் மற்றும் 3 பேரூர் ஆகிய பகுதிகளுக்கான மாணவரணி அமைப்பாளர் மற்றும் 5 துணை அமைப்பாளர்கள் பதவிக்கு பெண்கள் உட்பட சுமார் 300க்கும் மேற்பட்டோர் விருப்ப மனு அளித்து கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருப்பத்தூர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் டி.பிரபாகரன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் செய்திருந்தனர்.

### மாங்காட்டில்

## செயல்வீரர்கள் கூட்டம்!

காஞ்சிபுரம், அக். 01 -

மாங்காடு நகர தி.மு.க. சார்பில் பாகம் வாரியாக (பூத்) கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெறுகிறது என நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.

கூட்டம் நடைபெறும் நாள், பாகம், தலைமை விவரம் வருமாறு:-

1.10.2023 ஞாயிறு காலை 9 மணி 157வது பாகம் - இ.மனோகரன், காலை 10.30 மணி 158வது பாகம் - எம்.எம்.கணபதி, காலை 11 மணி -153வது பாகம் - பி.திருநாவுக்கரசு, மாலை 3 மணி 154வது பாகம் - சு.துரை, மாலை 4 மணி - 155வது பாகம் - ஆ.குமரேசன், மாலை 4.30 மணி156வது பாகம் - ஆ. குமரேசன், மாலை 4.30 மணி 156வது பாகம் - மு. சம்பத் ஆகியோர் தலைமையிலும் நடைபெறுகிறது என நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தெரிவித்துள்ளார்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு


# கிராமப்புற பெண்களிடம் நல்ல வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!

சிவகங்கை, அக். 01-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டார். நிகழ்ச்சி முடிவடைந்த பிறகு அமைச்சர் பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

முன்னாள் முதல்வர் தலைவர் கலைஞர் ஆட்சியில் பெண்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வந்தார். அதில் குறிப்பாக சொத்தில் பெண்களுக்கு பங்கு, திருமணத்திற்கான நிதி உதவி, சுய மகளிர் குழு போன்ற பல்வேறு எண்ணற்ற திட்டங்களை அறிவித்து அதை செயல்படுத்தினார். அவர் வழியில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற தளபதி அவர்கள் பதவி ஏற்றவுடன் மகளிருக்கு இலவச கட்டணபேருந்து பயணம் புதுமைப்பெண் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தற்பொழுது இம்மாதம் பதினைந்தாம் தேதி பேரறிஞர் அண்ணா பிறந்த நாளில் ஒரு கோடியே 6 லட்சத்து 51 ஆயிரம் மகளிர் மாதம்தோறும் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார். இவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அவர்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதில் விடுபட்டவர்கள் 30 நாட்களுக்குள் கோட்டாட்சித் தலைவரிடம் மேல்முறையீடு செய்யலாம். அவர்கள் மனு பரிசீலனை செய்து அவர்களுக்கும் வழங்கப்படும். அனைத்து மகளிர்களுக்கும் உரிமைத் தொகை கிடைப்பது குறித்து முதல்வர் முடிவெடுப்பார். இத்திட்டத்தில் குறிப்பாக கிராம மக்கள் அதிக அளவில் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். அவர்கள் இந்த திட்டத்தினை அறிவித்து செயல்படுத்திய முதல்வருக்கு நன்றி தெரிவிக்குமாறு நாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் கூறி வருகிறார்கள். தேர்தல் வாக்குறுதியில் முத்தாய்ப்பான திட்டமான இத்திட்டத்தினை பல்வேறு நிதி நெருக்கடி சூழ்நிலையில் முதல்வர் அவர்கள் அறிவித்து செயல்படுத்தி உள்ளார். பெண்களிடையே நல்ல வரவேற்பினையும் மகிழ்ச்சியையும் பெற்றுள்ளது.



பா.ஜ.க. தலைவர்களில் ஒருவரான எச். ராஜா ஜாதி மத மோதல்களை தூண்டும் வகையிலும், முதல்வர் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை தரக்குறைவாகவும் அவமரியாதையாகவும் மேடைகளில் பேசி வருகிறார். வெளி மாநிலத்திலிருந்து ஏராளமான இளைஞர்கள் தமிழ்நாட்டிற்கு வேலைக்காக வருகிறார்கள். தமிழ்நாடு அனைவரையும் சமமாக பாவித்துவருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு அமைதியான மாநிலமாக உள்ளது. இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் ஹெச்.ராஜா பேசுவது கண்டிக்கத்தக்கதாகும். அவரது பேச்சு ஜாதி, மத மோதல்களை உருவாக்கும் வகையில் அமைந்து வருகிறது. அவர் மீது காவல்துறையில் புகார் கூறப்பட்டுள்ளது. சட்டப்படியான நடவடிக்கை களை காவல்துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். அ.தி.மு.க .பா.ஜ.க .கூட்டணி முறிவு குறித்து அவர்கள் இருவரிடம் தான் கேட்க வேண்டும். தலைவர் கலைஞர் வழியில் ஆட்சி நடத்தும் முதல்வர் தளபதி அவர்கள் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு சைக்கிள், உயர் கல்வி படிப்பவர்களுக்கு மாதம் ஆயிரம் தொகை புதுமைப்பெண் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் முதல்வர் அவர்களுக்கு தொடர்ந்து மக்கள் ஆதரவினை தர வேண்டும். இவ்வாறு அமைச்சர் பெரியகருப்பன் கூறினார்.

மாவட்ட சுகாதாரத் துறை இணை இயக்குனர் விஜயசந்திரன், தேவகோட்டை கோட்டாட்சியர் பால்துரை, பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், ஒன்றியக்குழு தலைவர் எஸ்.சண்முகவடிவேலு, பேரூர் கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், பொருளாளர் ஏ.எம்.கண்ணன் ஆகியோர் உடன் இருந்தார்கள்.

### சேங்கை மாறன் தலைமையில்

# திருப்புவனத்தில் மகளிர்க்கான அரசின் திட்டங்கள் குறித்த துண்டுப் பிரசுரங்கள்!

## ஆர்.தமிழரசி எம்.எல்.ஏ. வழங்கினார்!

திருப்புவனம், அக். 01 -

திருப்புவனம் ஒன்றியம் சங்கங்குளம், புளியங்குளம், வயல்சேரி, கீழராங்கியம், வெள்ளைக் கரை, நைனார் பேட்டை ஆகிய பகுதிகளில் மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் - திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன் தலைமையில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி பொதுமக்களு க்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை 1000 ரூபாய் மற்றும் மகளிருக்கான தமிழக அரசின் திட்டங்கள் வழங்கியதை விளக்கி துண்டு பிரசுரத்தை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய தி.மு.க. செயலாளர் கடம்ப சாமி, பேரூராட்சி துணைத் தலைவர் ரகமத்துல்லா கான், மாவட்டப் பிரதிநிதி சுப்பையா, ஒன்றிய நிர்வாகிகள் சுப்பிரமணியன், இளங்கோவன், மகேந்திரன், கோபால், முருகன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் தேவதாஸ், மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர் அண்ணாமலை, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பாலகிருஷ்ணன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




01.10.2023
8-ஆம் ஆண்டு நினைவேந்தல்



ஆற்காடு நகரக் கழக செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.
மு.வேலூர் மாவட்டப்பொருளாளர், மு.தணிக்கைக்குழு உறுப்பினர்
மு.ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர்
P.N.சுப்பிரமணியன் Ex.MLA.,
கடமை உணர்வுடன் மக்கள் பணியாற்றி, கண்ணியம் மாறாமல் வாழ்ந்துகாட்டி, கட்டுப்பாடு காத்து கழகம் வளர்த்தாய்! என்றும் நீங்கள் வகுத்துத்தந்த கழகப்பாதையில் தடம்மாறாது எங்கள் பயணம் தொடரும்.
என்றும் உங்களது நீங்காத நினைவுகளை சுமந்து
P.N.S.இராஜசேகரன் நகர அவைத்தலைவர் மு.நகர செயலாளர்-ஆற்காடு
Dr.P.N.S.சரவணன் M.B.B.S.,M.S.,F.A.I.S., மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர், இராணிப்பேட்டை
Dr.S.பவளக்கொடி சரவணன் B.D.S., ஆற்காடு நகரமன்ற துணைத்தலைவர், ஆற்காடு நகராட்சி மாவட்ட மகளிர் அணி துணைத்தலைவி, இராணிப்பேட்டை
மற்றும் குடும்பத்தினர்கள் ஆற்காடு நகரம், இராணிப்பேட்டை மாவட்டம்

## காவிரியில்

# 12,500 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்துவோம்!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திட்டவட்டம்!

சென்னை, அக். 01–

“மேட்டூர் அணையில், கடந்தாண்டு இதே நாளில் 95.66 சதவீதம் தண்ணீர் இருந்தது. ஆனால், இன்றைய நிலவரப்படி அங்கு 11.78 சதவீத தண்ணீர் தான் உள்ளது. எனவே, இன்று நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை வாரிய அவசரக் கூட்டத்தில், தமிழகத்துக்கு, 12,500 கன அடி தண்ணீர் திறக்க வலியுறுத்துவோம்” என்று தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சென்னையில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், இன்று நடைபெறவுள்ள காவிரி மேலாண்மை வாரியத்தின் அவசரக் கூட்டத்தில், தமிழக அரசு சார்பில் முன்வைக்கப்படவுள்ள கோரிக்கைகள் குறித்து கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளித்த அவர், “எங்களுடைய வாதம் ஒன்றுதான். அது காவிரி மேலாண்மை வாரியமாக இருந்தாலும் சரி, காவிரி ஒழுங்காற்றுக் குழுவாக இருந்தாலும் சரி, நாங்கள் கேட்பது தமிழகத்துக்கு 12500 கன அடி தண்ணீர் தேவை.

ஆனால், காவிரி ஒழுங்காற்றுக் குழு 5000 கன அடி தண்ணீர் திறக்கத்தான் உத்தரவிட்டது. அந்த தண்ணீர் போதவில்லை. இதனால் பயிர்கள் காய்ந்து போகின்றன. எனவே, காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்திலும், நாங்கள் 12,500 கன அடி தண்ணீர் திறக்கவே கோரிக்கை வைப்போம். இதுவரையில் காவிரியில் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்த தண்ணீர் திறப்பு குறுவைக்கு போதுமானது என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு பரவாயில்லை அவ்வளவுதான்.



கர்நாடகத்தில் தண்ணீர் இல்லாமல் இருக்கும்போது தமிழகம் அவர்களிடம் தண்ணீர் கேட்கவில்லை. தமிழகத்தில் தண்ணீர் இல்லை. கடந்தாண்டு இதே நாள் 29.09.2022 கே.ஆர்.எஸ் அணையில் 97.08 சதவீதம் தண்ணீர் இருந்துள்ளது. கடந்தாண்டு கபினியில் 95.74 சதவீதம் தண்ணீர் இருந்தது. இன்றைய நிலவரப்படி 68.55 சதவீத தண்ணீர் உள்ளது. ஏலங்கி அணையில் கடந்தாண்டு இதே நாளில் 90 டிஎம்சி தண்ணீர் இருந்தது, இன்றைய நிலவரப்படி 79 டிஎம்சி தண்ணீர் இருக்கிறது. ஹேமவதியில் கடந்தாண்டு இதே நாளில் 99 சதவீதம் தண்ணீர் இருந்தது, அங்கு இன்றைய நிலவரப்படி 49 சதவீதம் உள்ளது.

மேட்டூர் அணையில், கடந்தாண்டு இதே நாளில் 95.66 சதவீதம் தண்ணீர் இருந்தது. ஆனால், இன்றைய நிலவரப்படி அங்கு 11.78 சதவீத தண்ணீர் தான் உள்ளது. எனவே, கர்நாடகத்தில் உள்ள அணைகளில் தண்ணீர் கொடுக்கக்கூடிய அளவுக்கு போதிய தண்ணீர் உள்ளது. ஆனால் தண்ணீர் தரமாட்டேன் என்று சொல்வது நியாயம் அல்ல.

ஒரு ஆற்றின் போக்கில், கடைசிப் பகுதியை டெயில் எண்ட் என்று சொல்வார்கள், அவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டும். அந்த இயற்கை நீதியையும் கர்நாடகா பின்பற்ற மறுக்கிறது. தமிழகத்தில் உள்ள பயிர்கள் தண்ணீர் இல்லாமல் காய்வதாக தமிழக முதல்வர் நேரடியாக அறிக்கை வெளியிடுகிறார். அதற்கும் அவர்கள் செவி சாய்க்க மாட்டேன் என்கிறார்கள்.

காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் உத்தரவையும் ஏற்க மறுத்து மறியல் போராட்டங்கள் செய்கின்றனர். இரு அண்டை மாநிலங்கள், ஒட்டியருக்கும் மாநிலங்கள் இங்குள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் கர்நாடகா மாநிலத்தில் வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான கன்னட மக்கள் தமிழகத்தில் வாழ்கின்றனர். தினந்தோறும் போக்குவரத்து உள்ளது. எனவே இரு மாநிலங்களும் நட்புடனும், பாசத்துடனும் இருந்தால் தான், மாநிலம் விட்டு மாநிலம் சென்று வாழ்பவர்கள் அச்சமின்றி அங்கு வாழ முடியும். அதைவிடுத்து, உச்ச நீதிமன்றத்தின் ஆணையையும் மதிக்காமல், காவிரி மேலாண்மை வாரியம், காவிரி ஒழுங்காற்றுக் குழு சொல்வதையும் மதிக்காமல், தமிழக முதல்வரின் வேண்டுகோளையும் கர்நாடகா ஏற்காமல் இருப்பது நியாயம் அல்ல.

நீண்டகால அனுபவம் பெற்றவர் கர்நாடக மாநிலத்தின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் சிவக்குமார். அரசியலில் தேவகவுடா காலத்தில் இருந்து எல்லாவிதமான நடைமுறைகளையும் அறிந்தவர் அம்மாநில முதல்வர் சித்தராமையா இவர்கள் இருவர் மீதும், இன்று வரையில் நான் தணியாத மதிப்பு கொண்டுள்ளேன்.

எனவே, எது எப்படி இருந்தாலும், உச்ச நீதிமன்றம், காவிரி ஒழுங்காற்றுக் குழு உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு தண்ணீர் விட்டுக் கொண்டுள்ளனர். அதற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன்” என்று அவர் கூறினார்.

# தமிழ்நாட்டில் ஒரு கோடி பனை விதைகள் விதைக்க அரசு ஏற்பாடு!

*சென்னை, அக்.01-*

*பனை மரத்தொழிலாளர்கள் நலவாரியம், கிரீன் நீடா சுற்றுச் சூழல் அமைப்பு மற்றும் நாட்டு நலப்பணி திட்டம் ஆகிய அமைப்புகளோடு தன்னார்வலர்களும் இணைந்து தமிழ்நாடு அரசு வழிகாட்டுதலுடன் பனை விதைகளை விதைக்கும் பணி நடைபெற உள்ளது.*

*திருவள்ளூர் முதல் கன்னியாகுமரி கடற்கரை வரையிலான ஆயிரத்து 76 கிலோ மீட்டர் தொலைவு நெடுகிலும் ஒரு கோடி பனை விதைகள் சேகரித்தல் மற்றும் சேகரித்த பனை விதைகளை அக்டோபர் 1ல் நடவு செய்தல் போன்ற பணிகள் தொடங்கப்படவுள்ளன. இதில் அனைத்து கல்லூரி மாணவர்களும் பங்கு பெறும் வகையில், ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் 10 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகளின் முதல்வர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

## இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால

# சட்டத் தீர்வுகள் அடங்கிய இடைக்கால அறிக்கை! முதல்வரிடம் சமர்ப்பிப்பு!

## அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் வழங்கினார்!

*சென்னை, அக்.01-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.09.2023) தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சரும், இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவின் தலைவருமான செஞ்சி கே.எஸ்.மஸ்தான் சந்தித்து, இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால சட்டத் தீர்வுகள் அடங்கிய இடைக்கால அறிக்கையினை சமர்ப்பித்தார்.*

*பல்வேறு காலகட்டங்களில் இலங்கையிலிருந்து புகலிடம் தேடி வந்த தமிழர்களுக்கு தாய் உள்ளத்தோடு தமிழ்நாடு அரசானது அவர்களை பாதுகாத்து பராமரித்து பல்வேறு நலத் திட்டங்களை சுமார் 40 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது தற்போது சுமார் 58,357 இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களிலும், 33,479 நபர்கள் காவல்துறை பதிவோடு முகாம்களுக்கு வெளியிலும் தங்கி உள்ளனர்.*

*இந்திய சட்டங்களின் அடிப்படையில் இவ்வாறு போரினால் தஞ்சம் புகுந்தவர்களை சட்ட ரீதியாக நடத்துவதற்கான முறைமை இல்லாத சூழலிலும், ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற தமிழர் வாழ்வியல் மரபின் அடிப்படையிலும், மனிதாபிமான அடிப்படையிலிலும், தாய் தமிழ் நாட்டை நாடி வந்த இலங்கை தமிழ் சொந்தங்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு உறுதியான செயல்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.*

*கடந்த 2021 ஆம் ஆண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு மேம்படுத்தப்பட்ட நலத்திட்ட உதவிகள், வீட்டு திட்டங்கள், வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான செயல்பாடுகள் ஆகியவை அறிவிக்கப்பட்டு, சிறப்புடன் செயலாக்கம் பெற்று மக்களின் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டு இருக்கின்றன.*

*இவற்றில் முக்கியமானதாக இலங்கை தமிழர்களின் நலன் பேணவும், அவர்களின் நீண்ட கால தீர்வுகளை அடையாளம் காணவும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான ஆலோசனைக் குழுவை, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் திரு. செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அமைத்தார்.*

*இக்குழுவில் துணைத் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் மரு. கலாநிதி வீராசாமி, உறுப்பினர்களாக சட்டமன்ற உறுப்பினர் திருமதி. தமிழரசி, பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள், ஐக்கிய நாடுகளின் அகதிகளின் அமைப்பின் பிரதிநிதி, தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், மூத்த பத்திரிகையாளர், சட்ட வல்லுநர், கல்வியாளர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கி, பல்வேறு ஆய்வுகளும், கலந்துரையாடல்களும், சட்ட பகுப்பாய்வுகளும் நடத்தப்பட்டன.*

*இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால தேவைகள் மற்றும் தீர்வுகள், அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களின் கல்வி, எதிர்கால நலன் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க அமைக்கப்பட்ட இந்த ஆலோசனைக் குழு, பல கட்டங்களில் வரலாறு மற்றும் சட்ட முறைமைகளை ஆராய்ந்து நீண்டகால தீர்வு, சுயசார்பு மற்றும் வாழ்வாதாரம் குறித்த இடைக்கால அறிக்கையை முதலமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தது.*

*இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, குழுவின் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி எ. தமிழரசி, பொதுத்துறை செயலாளர் க. நந்தகுமார், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் மற்றும் உறுப்பினர்செயலர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், உள்துறை துணைச் செயலாளர் திருமதி சித்ரா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

## கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை - இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும்

# மீனவர்களின் குடும்பங்களுக்கு நிதி வழங்கிட ரூ.1 கோடி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, அக்.01-*

*எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக விபத்தில் சிக்கி 2016 முதல் 2021-ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கிட ரூ.50.00 இலட்சம் மற்றும் இனிவரும் காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ரூ.50.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.1.00 கோடி கொண்டு சுழல் நிதி உருவாக்கப்பட்டுள்ளது.*

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு:-*

*எதிர்பாராமல் கடலில் ஏற்படும் அசாதாரண சூழ்நிலை மற்றும் இயற்கை சீற்றங்களின் காரணமாக விபத்தில் சிக்கி காணாமல் போன மீனவர்களின் குடும்பங்கள் எந்த வருமானமும் இன்றி வறுமைக்கோட்டிற்கு கீழ் செல்லும் நிலையில் உள்ளதால், மீனவர் நலனில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு, அம்மீனவர்களின் துயர் துடைக்க சுழல் நிதியினை உருவாக்கி அதிலிருந்து காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) வழங்கும் பட்சத்தில் வாழ்வாதாரம், பொருளாதார ரீதியாக மேம்படுத்திக் கொள்ள பேருதவியாக அமையும் என்பதால், 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரை நிலுவையாக உள்ள 25 மீனவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ. 2.00 இலட்சம் வீதம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) நிவாரணம் வழங்கிட ரூ.50.00 இலட்சமும் இனிவரும் காலங்களில் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு விரைவில் நிவாரணம் வழங்குவதற்காக ரூ.50.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1.00 கோடி கொண்டு சுழல் நிதி உருவாக்கி அரசாணை (நிலை) எண். 112, கால்நடை பராமரிப்பு. பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்(மீன்)துறை, நாள் 25.09.2023ல் ஆணைகள் வெளியிட்டுள்ளது.*

*இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.*



# கலைஞரும் நானும் 38

**“கலைஞர், மனிதராகப் பிறந்த மகாசக்தி கொண்டவர் என்பதாகவே நான் பார்க்கிறேன். அவர் வாய்ப்புக் கொடுத்து செய்த சிலைகள் மட்டுமல்ல, அவரது சிலையை வடித்ததும் வடிப்பதும் நான் பெற்ற பேறு” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் சிற்பி தீனதயாளன்.**

■ சிற்பி தீனதயாளன்

## “கண்ணகிக்கு வளையல் போட வேண்டாம்!”





“1966-ஆம் ஆண்டு அண்ணா சாலையில் அமைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா சிலை, மயிலாப்பூரில் அமர்ந்த நிலையில் உள்ள திருவள்ளுவர் சிலை, நாகர்கோவிலில் அமைக்கப்பட்ட ஜீவானந்தம் சிலை என என் தாத்தா எஸ்.பி.பிள்ளை அவர்கள் செய்த சிலைகள், கலைஞரிடம் நற்பெயரை ஏற்படுத்தி இருந்தன.

அண்ணா சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிலை தயாரானபோது, அப்போது புளியந்தோப்பில் இருந்த எங்கள் சிற்பக் கலைக்கூடத்துக்கு அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர் என தலைவர்கள் வருகை தந்துள்ளனர். அது மிகவும் தத்ரூபமாக இருந்ததால், தாத்தா எஸ்.பி.பிள்ளை மீது கலைஞர் நல்ல அபிப்பிராயம் கொண்டிருந்தார். அதன் மூலம் பல வாய்ப்புகளை உருவாக்கித் தந்தார் கலைஞர்.

முக்கியமாகச் சொல்ல வேண்டுமெனில் என் தாத்தா பெயர் எஸ்.பக்கிரி பிள்ளை என்பதாகும். “சிற்பிக்கு பக்கிரி என்கிற பெயர் அழகில்லையா... எஸ்.பி.பிள்ளை என வைத்துக்கொள்” என்று தாத்தாவின் பெயரை மாற்றியவர் கலைஞர். இப்படி கலைஞர் குறித்த என் ஆரம்பக் கால நினைவுகள் உள்ளன. அவை எங்களுக்குக் கிடைத்த பெருமை என்பேன்.

### கலைஞரைச் சந்தித்தல்

1982-ஆம் ஆண்டு என் தாத்தா இறந்த பின்னர், சிற்பக் கலையில் எங்கள் குடும்பத்தினர் தொடர்ச்சியாக ஈடுபடவில்லை. நான் ஐ.சி.எஃப் நிறுவனத்தில் கடைநிலை தொழிலாளியாக இருந்தேன். அவ்வப்போது சிலைப் பணிகளில் ஈடுபட்டு வந்தேன்.

கோவையில் தாத்தா காலத்தில் செய்து தந்த அண்ணா சிலை ஒன்று ஜி.டி.நாயுடு நிறுவனம் எதிரில் இருந்தது. அந்தச் சிலை சேதம் அடைந்த நிலையில் அதை மீண்டும் செய்ய, மறைந்த தலைவர்கள் மு.கண்ணப்பன், கோவை மு.ராமநாதன் ஆகியோர் மறைந்த தலைவர் ஆர்.டி.சீத்தாபதியிடம், அந்தக் குடும்பத்தில் யாராவது சிலை செய்யும் தொழிலில் இருக்கிறார்களா என விசாரித்துள்ளனர். அந்தச் சிலைத் திறப்பு நிகழ்ச்சிக்காகச் சென்ற கலைஞர், சிலையை யார் செய்தது என விசாரித்திருக்கிறார். அப்போது என்னைக் குறித்து அறிந்ததுடன், அதை மனதில் வைத்திருந்தவர், 1991 ஆம் ஆண்டில் அறிவாலயத்தில் அண்ணா சிலை அமைக்கும் வாய்ப்பினை எனக்கு வழங்கினார்.

**சிலைகள் எப்படி வர வேண்டும் என்கிற நுணுக்கங்களை அவரைப்போல கவனித்துச் சொல்ல முடியாது.**

அவரைச் சந்திக்கச் சென்றபோது, எனது தாத்தா குறித்த நினைவுகளைப் பகிர்ந்து கொண்டவர், என் வேலை போன்றவற்றை அக்கறையுடன் விசாரித்து “இந்த வேலைகளைச் சிறப்பா செய், நல்லா வருவ” என வாழ்த்தினார். அப்போது எங்கள் சிற்பக் கலைக்கூடம் மீஞ்சூரில் இருந்தது. அந்தச் சிலைத் தயாரிப்புப் பணிகளைப் பார்வையிட அங்கு வருவார். சாலைகள் மோசமாக இருக்கும். “இவ்ளோ தூரம் வர முதுகெல்லாம் வலிக்குதுய்யா” என்பார். அறிவாலயத்தில் அண்ணா சிலையை அமைத்த பின்னர், பல வாய்ப்புகளை வழங்கினார்.

கோபாலபுரம் இல்லத்தில் அஞ்சுகம் அம்மா சிலையைத் தாத்தா செய்துள்ளார். அதன் பின்னர் ஐயா முத்துவேலர் சிலையை நான் செய்தேன். அதேபோல திருக்குவளை இல்லத்தில் உள்ள சிலைகளும் நாங்கள் செய்ததுதான்.

### ஒரு நூலளவு கவனிப்பு

சிலைகள் எப்படி வர வேண்டும் என்கிற நுணுக்கங்களை அவரைப்போல கவனித்துச் சொல்ல முடியாது. சிலைத் தயாரிப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் அவரது ஆலோசனை இருக்கும். சமத்துவபுரம் திட்டம் தொடக்கத்தின்போது, அந்தச் சமத்துவ புரங்களில் பெரியார் சிலையை நிறுவ விரும்பினார். அதற்கான முதற்கட்ட களிமண் அச்சு வேலைகளைத் தலைமைச் செயலகத்திலேயே செய்து அவருக்குக் காட்டினோம்.

அப்போது நடப்பதைக் குறைத்துக் கொண்டு சக்கர நாற்காலிக்கு மாறி இருந்த நேரம். பெரியாரின் மார்பளவு களிமண் சிலையைப் பார்த்தவர், “கொஞ்சம் களிமண் கொடு” என வாங்கிச் சிலையின் இடது பக்க மூக்கில் ஒட்டவைத்துக் கொஞ்சம் சரி செய்யச் சொன்னார். பெரியாருக்கு வலது பக்க மூக்குக்கும், இடது மூக்குக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கும்யா என்றார். அவருக்கு மட்டுமில்ல, எல்லோருக்கும் அப்படி ஒரு நூலளவு வித்தியாசம் இருக்கும், கவனித்துப் பார் எனச் சிறு விளக்கமும் அளித்தார்.

### கண்ணகியின் வளையல்கள்

மெரினாவில் கண்ணகி சிலை அகற்றப்பட்டபோது, அதேபோன்ற சிலையை அன்பகத்தில் நிறுவத் திட்டமிட்டார். அதற்கான பணிகளை என்னிடம் அளித்திருந்தார். அதற்கான அச்சுகளைத் தயார் செய்த நிலையில், அதை வந்து பார்த்தார். நான் கண்ணகி சிலையின் கைகளில் வளையல்கள் இருப்பதுபோல அமைத்திருந்தேன். அதைப் பார்த்தவர், “எல்லாவற்றையும் இழந்து நீதி கேட்க வருபவள் எப்படிய்யா வளையல் அணிந்திருக்க முடியும்” எனக் கூறி அதை எடுக்கச் சொன்னார். நான் ‘பூம்புகார்’ படத்தில் கண்ணகியாக நடித்த விஜயகுமாரி அவர்களின் படத்தினை வாங்கி அதில் ‘ரெபரன்ஸ்’ எடுத்திருந்தேன், என அவரிடம் தெரிவித்தேன்.

அதேபோல, மன்னனிடம் நீதி கேட்பவள் கைகள் கொஞ்சம் உயர்ந்திருக்க வேண்டும் என்றும் சில திருத்தங்கள் கூறியதுடன், எப்படி இருக்க வேண்டும் என்பதை அவரே செய்தும் காட்டினார். அடுத்த நாள் உடன்பிறப்பு கடிதத்தில், அவர் சொன்ன திருத்தங்கள் குறித்து எழுதினார். அதற்கு அடுத்த நாள் காலை 5 மணி இருக்கும். சண்முகநாதன் ஐயா போன் செய்தார். “தீனா... தலைவர் பேசணுமாம்” எனச் சொல்ல, அவரிடமிருந்து போனை கலைஞர் வாங்கி, “மீஞ்சூரு... நீ செஞ்சதுதான்யா கரெக்ட்டு” என்றதுடன், கண்ணகி வளையல் அணிந்திருக்க முடியும் எனத் தமிழறிஞர்கள் பலரும் விளக்கம் அளித்ததாகக் கூறியதுடன், நீ வளையல் வை, ஆனா, அந்தக் காலத்தில் இருந்ததுபோலச் செய் எனக் கூறினார். அதையும் உடன்பிறப்பு கடிதத்தில் பதிவு செய்தார்.

இப்படித் தனது எண்ணத்தைப் பொதுவில் பகிர்ந்து கொள்வதும், அங்கிருந்து வரும் எதிர்வினைகளை எடுத்துக் கொள்வதற்கும் எத்தனை தலைவர்கள் தயாராக இருப்பர்? கலைஞர் அந்தப் பண்பில் யாரும் நெருங்க முடியாத இடத்தில் இருப்பவர். அதேபோல சிலை நிறுவும்போது, வளையலை எப்படிய்யா போடுவ, எனச் சந்தேகத்தைக் கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்டார்.

### சிலைக்கான சிரத்தைகள்

‘முரசொலி’ அலுவலக வளாகத்தில் மறைந்த தலைவர் மாறன் அவர்களின் சிலையைச் செய்வதற்கும் வாய்ப்பு வழங்கினார். அந்தச் சிலையைச் செய்யும்போது, ஆரம்பப் பணிகளில் இருந்து நிறுவும் நாள் வரை அவ்வளவு கவனம் செலுத்தினார். எத்தனை மணி என்றாலும் ,அதைக் கவனிக்காமல் சென்றதில்லை. அதேபோன்ற ஒரு சிலை டெல்லி பாராளுமன்றத்திலும் நிறுவப்பட்டது. அந்தச் சிலை செய்யும் வாய்ப்பையும் எனக்கே வழங்கினார். அரசு சார்பில் வழங்கப்படும் பணிகள் என்றாலும், அவ்வளவு அக்கறையுடன் அவற்றை வந்து கவனிப்பார். அந்தப் பணிகளுக்காகப் பலமுறை மீஞ்சூர் வந்துள்ளார்.

‘அறிவாலயம்’, ‘அன்பகம்’, ‘முரசொலி வளாகம்’, ‘கோபாலபுரம் இல்லம்’, ‘திருக்குவளை இல்லம்’ என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வாய்ப்புகளால் வளர்ந்தேன். அதேபோல, அவரது சிலைகளையும் செய்ய வேண்டிய பாக்கியம் பெற்றவனாக இருக்கிறேன். ஓமந்தூரார் வளாகம், முரசொலி அலுவலகத்தில் எழுதுவதுபோல உள்ள சிலை, மதுரை நூலகம் எனக் கலைஞரைச் சிலையாக எழுப்புகையில் அந்த மகானுடன் நான் உரையாடுகிறேன். அந்த வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும். நான் அவருடனே பயணிக்கிறேன்..!”

...பகிர்வார்கள்

---

## விஞ்ஞானிகளின் விஞ்ஞானி!

தமிழகத்தில் அமைந்து கிடக்கும் அளவற்ற உயிரியல் வளங்களின் அடிப்படையில், சென்னையில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்துறையும், டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து, ஆசிய, பசிபிக் மண்டலத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் அடங்கிய செயலரங்கம் ஒன்றை 1996-ஆம் ஆண்டு டிசம்பரில் நடத்தியது.

‘உயிரியல் தொழில்நுட்பத் துறையிலே தகுதி வாய்ந்த பெண்களுக்குச் சுயவேலை வாய்ப்புகளைப் பெருக்கிடும் நோக்கத்தோடு பெண்களுக்கான உயிரியல் தொழில்நுட்பப் பூங்காக்களை அமைக்கலாம்’ என்று அந்தக் கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அன்றைய கலைஞர் அரசு, இந்தியாவிலேயே மகளிருக்கான முதல் உயிரியல் தொழில்நுட்பப் பூங்காவை சென்னை சிறுசேரியில் அமைத்திட முடிவு செய்தது. இதன்படி இந்தப் பூங்காவை இங்கு அமைப்பதற்காக 20 ஏக்கர் நிலம் தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தப் பூங்காவுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் 29.07.1998 அன்று அடிக்கல் நாட்டினார்.

ஏறத்தாழ ஆயிரம் பெண்கள், தொழில்முனைவர்களாக உருவாக இந்தப் பூங்கா வழிவகுத்தது. அதனால்தான் கலைஞரை **‘விஞ்ஞானிகளின் விஞ்ஞானி’** என்று பாராட்டினார், சமீபத்தில் மறைந்த வேளாண்மை விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன்.

---

## ஃப்ளாஷ்பேக்



### தந்தைக்கு மகனின் உதவி!

என் தந்தை கோமதிநாயகம் கழகம் தொடங்கப்பட்ட நாள் முதலே தலைவர் கலைஞருடன் நெருக்கமாகப் பழகி வந்தார். இருவருக்கும் இடையில் கடிதப் போக்கு வரத்தும் இருந்து வந்தது. தனது 35 வயதில் என் தந்தை பார்வையை இழந்தார். அதன் பிறகு அவர் சொல்லச் சொல்ல நாங்கள் தலைவர் கலைஞருக்குக் கடிதம் எழுதுவோம். 1996-ஆம் ஆண்டு கோவில்பட்டி காந்தி மைதானத்துக்குப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த தலைவர் கலைஞர் அவர்கள் என் தந்தையை சந்தித்து சால்வை அணிவிக்க வேண்டும் என்பதை அன்றைய மாவட்டச் செயலாளர் என்.பெரியசாமி அவர்களிடம் தெரிவித்துள்ளார். அதன் பெயரில், பொதுக் கூட்டத்தில் வைத்து என் தந்தைக்கு, தலைவர் கலைஞர் சால்வை அணிவித்துப் பாராட்டினார். உடன் ஐயா தமிழ்க்குடிமகன் அவர்களும் இன்றைய கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களும் இருந்தனர். இந்தப் புகைப்படத்தை எடுக்கும் வாய்ப்பு ஒரு புகைப்படக்காரனாக எனக்குக் கிட்டிய பெரும் வாய்ப்பு என்றே கருதுகிறேன்.



ஸ்டாலின் வெங்கடேசன்

**-ஜி.ஸ்டாலின் வெங்கடேசன், கோவில்பட்டி.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---


## கருவூலம்

### பிரிவினைவாத தடுப்புச் சட்டம்!

**1963-ஆம் ஆண்டு மே மாதம், தஞ்சை மாவட்டத்துக்கு கழகச் சுற்றுப்பயணம் திட்டமிட்டார் பேரறிஞர் அண்ணா. உடன் கலைஞரையும் அழைத்துச் சென்றார். அந்தச் சுற்றுப் பயணத்தின் போது கும்பகோணத்தில் அண்ணா பேசியதைத் திரித்து, தி.மு.கழகத்தைக் கலைத்து விடுவதாக அண்ணா கூறியதாகச் செய்தி வெளியிட்டன பத்திரிகைகள். அப்போது பிரிவினைவாத தடுப்புச் சட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடி இருந்த நேரம் என்பதால், பத்திரிகை செய்திகளைக் கண்டு அண்ணா கடும்கோபம் கொண்டு, “தி.மு.கழகத்தை நான் மட்டும் நினைத்தால், கலைத்துவிட முடியுமா?” எனக் காட்டமாக அறிக்கை வெளியிட்டு, கழகத்தின் ஜனநாயகப் பண்பாட்டினை விளக்கினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 257




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.